# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

**MITRA TIMES - Tamil & English Monthly**


| | | | |
|---|---|---|---|
| மலர்: XII இதழ்: 7 | ஜனவரி 2026 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ. 20/- |
| Vol.: XII Issue: 7 | January 2026 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20 |





– இணைப்புப் புத்தகம்



எல்லாமே இனி வெற்றி தான்!

– ஆசிரியர் கடிதம்



100 நாள் வேலை திட்டம் – நடந்ததும் நடக்கப் போவதும்!

ராஜா தேசிங்கும் வழுதாவூர் கோட்டையும்!

முதுகு வலிக்கு முக்கிய தீர்வு!




லிப்பிட் ப்ரொபைல் என்றால் என்ன?

## 2026ம் ஆண்டில் ஆரம்பமாகும் அரசியல் கட்சிகளின் ஆட்டம்!

# மித்ரா பிக்சர்ஸ் சார்பில்
# எங்கள்
# எம்.எஸ்.மூர்த்தி
# பங்கேற்பில் வெளிவரும்




## படம் வெற்றி பெற வாழ்த்துகிறோம்!



**-ஆர். எஸ்.சித்திக்**
ஆசிரியர்
அரசு இயந்திரம்
மாத இதழ்

# எல்லாமே இனி வெற்றி தான்!




**அ**ன்புடையீர் வணக்கம்

2026 ஆம் ஆண்டு பிறந்திருக்கிறது. ஒவ்வொரு புத்தாண்டு தொடக்கத்திலும் எதையாவது ஒரு சிந்தனையை நம் மனதில் நிறுத்திக்கொண்டு, வரும் ஆண்டில் நாம் இப்படி இருக்க வேண்டும், நமக்கு இப்படி அமைய வேண்டும், நாம் எப்படி நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் நமக்குள்ளே ஒரு கட்டுப்பாடு வைத்துக் கொண்டு அதை நடைமுறைப்படுத்துவதில் நாம் முனைப்பு காட்டுவோம். நாம் என்னதான் திட்டமிட்டாலும், நாம் என்னதான் செலவு செய்தாலும், நாம் என்னதான் எதிர்பார்க்க அளவிற்கு ஏற்பாடுகளை செய்தாலும் மற்றவருடைய ஒத்துழைப்பு இல்லாமல் அது நிறைவேறுவதற்கு வாய்ப்பு இல்லை. எனவே நம்மை நாமே முதலில் தயார் படுத்திக் கொள்வோம்.

மித்ரா குழுமம் தொடங்கப்பட்டு அதன் மேலாண் இயக்குனராக இருந்து வருகிறேன். இதில் இருக்கின்ற நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பணியை செய்து வருகின்றன. கட்டுமானத் துறையில் பல்வேறு நிறுவனங்களுக்கு கட்டிடங்கள் அமைத்து தந்து சிறந்த பெயர் எடுத்து இருக்கிறோம். அந்தத் துறையை தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

2015ல் துவங்கப்பட்ட மித்ரா டைம்ஸ் மாத இதழ் கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ந்து வெளி வந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு மித்ரா டைம்ஸ் மாத இதழுடன் இணைப்பு இதழாக பெண் உலகம் என்ற இதழை கொடுத்து வருகிறோம். இதனால் கூடுதலாக வாசகர்கள் புத்தகங்களை வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய இன்னொரு நிறுவனமான மித்ரா பிக்சர்ஸ் என்ற நிறுவனத்தின்

சார்பில் திரைப்படம் தயாரிப்பு பணியில் ஈடுபட்டு இருக்கிறோம்.

99/66 NINTYNINE/ SIXTY SIX என்ற படத்தை துவங்கியிருக்கிறோம். இதில் நான் தயாரிப்பாளர், இசையமைப்பாளர், பாடல் ஆசிரியர் , நடிகர் என்று எனது பங்களிப்பை நிறைவாக செய்திருக்கிறேன்.

இதன் இசை வெளியீட்டு விழாவும் HUSKYHOUSE என்ற படத்தின் துவக்க விழாவும் 3ஆம் தேதி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது. இந்த இதழில் இது பற்றி தனியே கட்டுரை வெளிய வந்துள்ளது.

விழாவில் மாண்புமிகு நீதியரசர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள், தொழிலதிபர்கள், கல்வியாளர்கள், திரைப்பட தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் அனைவரும் பங்கேற்று வாழ்த்தி விழாவை சிறப்பித்தனர்.

விழாவில் அவர்கள் அனைவரும் என்னைப் பற்றி குறிப்பிடும் போது என்னுடைய உழைப்பு பற்றி குறிப்பிட்டார்கள். அவர்களின் பாராட்டுக்கு நான் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். பல ஆண்டுகளாக அவர்களோடு நான் பயணித்து வருகிறேன்.

அந்தப் படத்தில் என்னோடு பணியாற்றிய இயக்கம், கேமரா, எடிட்டிங் ,இசை, நடனம் சண்டைக்காட்சி என்று அனைத்து துறைகளிலும் பணியாற்றிய தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டின் தொடக்கம் அருமையாக இருந்ததால் இது எல்லாமே வெற்றி தான் என்று எண்ணி அனைவரையும் வாழ்த்தி மகிழ்கிறேன்!

- **எம்.எஸ்.மூர்த்தி**

# உள்ளே...




**விழாக்கோலம் பூண்ட வள்ளுவர் கோட்டம்! மித்ரா குழும விழா கோலாகல கொண்டாட்டம்!** 7



**திரைப்பாடல்கள் மூலம் இலக்கியங்களை எளிமையாக சொன்னவர் கண்ணதாசன்!** 10



**மனிதநேயம் உள்ள குடல் நோய் மருத்துவர் தஞ்சை முரளி!** 14



**100 நாள் வேலை திட்டம் – நடந்ததும் நடக்கப் போவதும்!** 29




**பெட்ரோல் டீசல் உருவானது எப்படி?** 42



**கொலை செய்துவிட்டு சிறைக்குச் சென்று திரும்பியவர், எம்பிபிஎஸ் படித்து முடித்து டாக்டர் ஆகி சாதனை!** 47

# 2026ம் ஆண்டில் ஆரம்பமாகும் அரசியல் கட்சிகளின் ஆட்டம்!



2026 ஆம் ஆண்டு பிறந்தது அனைவரும் கொண்டாடினார்கள் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை உற்சாகம் கரைபுரண்டு கேக் வெட்டியும் மேளங்கள் அடித்தும் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொண்டும் தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டார்கள். பொதுமக்கள் இவ்வாறு மகிழ்ச்சியோடு இருக்க அரசியல் கட்சிகள் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலை மனதில் வைத்து தங்களது ஒவ்வொரு அசைவையும் நகர்த்தி வருகிறார்கள்.

ஏற்கனவே தி.மு.க அ.தி.மு.க என்று இரு கட்சிகளுக்கு மட்டும் இடையே போட்டி என்று இருந்த இருந்த களம் இப்போது மாறி இருக்கிறது. தமிழக வெற்றி கழகம் என்ற பெயரில் நடிகர் விஜய் கட்சி ஆரம்பித்து ஒவ்வொரு கூட்டத்திலும் இந்த தேர்தல் இரண்டே இரண்டு பேருக்கு மட்டும் தான் போட்டி ஒன்று TVK இன்னொன்று DMK என்று ஒவ்வொரு கூட்டத்திலும் தவறாமல் பேசி, தனது நடிப்பால் ரசிகர்களை உயிர்த் துடிப்போடு வைத்திருந்து அவர்களைத் தொண்டர்களாக மாற்றிய தனது தொண்டர்களிடையே தி.மு.க தான் தனது பிரதான எதிரி என்பதை நினைவூட்டி அவர்களை களத்துக்குதயார்படுத்தி இருக்கிறார். அதன் எதிரொலியாக வலைதளத்திலும் தொலைக்காட்சி விவாதத்திலும் இரண்டு கட்சிகளுக்கு இடையே மோதல்கள் கூர்மையாக மாறி இருக்கிறது.

ஒவ்வொரு கூட்டத்திலும் விஜய் பேசும் போது கூடுகின்ற கூட்டம் அரசியல் கட்சிகளிலேயே அவரோடு கூட்டணி வைத்தால் வெற்றி பெறலாம் என்ற எண்ணத்தை உருவாக்கினாலும் தி.மு.கவில் இருக்கின்ற எந்த கூட்டணியும் விஜய் கட்சியின் த.வெ.க.வுடன் கூட்டணி சேர தயங்குகிற நேரத்தில், காங்கிரஸ் கட்சி மாத்திரம் விஜய் கட்சியோடு கூட்டணி வைக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அந்தக் கட்சியில் சில முக்கிய பிரமுகர்கள் திமுக உடன் உள்ள கூட்டணி முறித்துக் கொண்டு விஜயுடன் சேர்ந்தால் அமைச்சரவையில் பங்கு பெறலாம் என்று வெளிப்படையாக பேசி வருகிறார்கள்.

தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வ பெருந்தகை அடிக்கடி மறுப்பு தெரிவித்தாலும் கூட தி.மு.க காங்கிரஸ் இடையே இருக்கின்ற உறவு எந்த நேரத்திலும் முடிந்து விடலாம் என்கிற அளவில் அரசியல் களம் மாறி இருக்கிறது.

அ.தி.மு.கவை பொறுத்தவரை மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் உள்ள பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்துள்ளதால் எடப்பாடி பழனிசாமி அவர்கள் தெம்பும் தைரியமாகவும் இருக்கிறார். சசிகலா, தினகரன், ஓ.பி.எஸ் விவகாரத்தில் தன்னுடைய வளர்ச்சிக்கு எந்த இடத்திலும் தடையாக இருந்துவிடக் கூடாது என்பதற்காக பா.ஜ.கவிடம் குறிப்பாக உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் தனது கருத்தை தெளிவாக எடுத்து கூறிவிட்டார் எடப்பாடி பழனிசாமி. அதுமட்டுமல்லாமல் 234 தொகுதிகளில் 200 தொகுதிகளை

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 12 ஜனவரி 2026 டைம்ஸ்-7

தலைவர் / நிர்வாக இயக்குனர்
**எம்.எஸ். மூர்த்தி**

துணை தலைவர் /இணை இயக்குனர்
**திருமதி சுஜாதா மூர்த்தி**

நிர்வாக சிறப்பு ஆலோசகர்
கலைமாமணி நடிகர் பூ.விலங்கு மோகன்

தலைமை செய்தி ஆசிரியர்
**மணவூர்.கி.விடாரண்யம்**

தலைமை நிர்வாக ஆசிரியர்கள்
DR. ஆ.தமிழ்மாறன் எம்.ஏ.எம்.பில்
**எஸ்.ரங்கராஜு**
**ஆர்.சையது சித்திக்**

நிர்வாக ஆசிரியர்
**ஆர்.குணசேகரன்**

செய்தியாளர்கள்
**பி.வினோத், வெ.சுரேஷ்**

செய்தி இணை ஆசிரியர்கள்:
**கோவை பி.முத்துராஜ்**
**சென்னை வி .குருசாமி**
**திருவள்ளூர் து. சண்முகம்**

பெண் உலகம் செய்தி ஆசிரியர்கள்:
**திருமதி.ராஜம்மாள் கல்வியாளர், நீலகிரி**
**திருமதி. சசிகலா செல்லமுத்து**
மகளிர் சுய உதவி குழு திருவள்ளூர்
கவிஞர் **வெண்ணிலா பாலாஜி.** நெய்வேலி
கவிஞர் **உமாஸ்கந்தவேள், சென்னை**

சட்ட ஆலோசகர்
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.எம்.பில்

வடிவமைப்பு
vidapublications@gmail.com

**அலுவலகம்:**
**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,**
**9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**
6374285644
mitratimes2015@gmail.com
www.mitratimes.com


தன்னுடைய பிரச்சாரத்தின் மூலம் முதல் சுற்று முடித்து போட்டியிட விருப்பம் தெரிவிப்பவர்களிடம் விருப்ப மனு வாங்குகிற அளவுக்கு தேர்தல் பணியில் வேகமாக இருக்கிறார். கொங்கு பகுதியில் செங்கோட்டையன் வெளியேறியதால் ஏற்படுகின்ற வாக்கு சரிவை சரிகட்ட செங்கோட்டையனுக்கு எதிராக ஏற்கனவே அரசியல் செய்து வந்த அந்த பகுதி அ.தி.மு.கவினரை அழைத்து உற்சாகப்படுத்தி வருகிறார். எடப்பாடி களத்தில் உற்சாகமாக வலம் வந்தாலும் உள்ளுக்குள் மற்ற மாநிலங்களில் பா.ஜ.க கூட்டணி கட்சிகளை நடத்திய விதத்தை அவ்வப்போது நினைத்து சற்று கலக்கமடைகிறார் என்பது உண்மை.2026ல் எதையும் சந்தித்து விடலாம் என்கிற தைரியத்தோடு அவர் இருக்கிறார்.

பா.ம.க என்ற கட்சியை துவங்கிய போது ராமதாஸ் அவர்கள் அ.தி.மு.க, தி.மு.க என்று மாறி மாறி கூட்டணி வைத்து அரசியல் செய்து வந்தார். ஒரு கட்டத்தில் பாமக எந்த கட்சியோடு கூட்டணி வைத்திருக்கும் அந்த கட்சி ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கையில் அந்த கட்சியோடு பேச்சுவார்த்தை நடத்துவார்கள். அந்த நேரத்தில் ராமதாஸ் தொகுதிகளை அதிகம் பெறுவதில் முனைப்பு காட்டி இரண்டு பக்கமும் பேச்சுவார்த்தை நடத்தி வந்து தனது கட்சியை பலப்படுத்தி வந்தார்.

ஆனால் அவரது மகன் அன்புமணி ராமதாஸ் தனது தந்தையோடு முரண்பட்டு பா.ம.கவுக்கு எதிராக களம் காண்கிறார். அந்தக் களத்தில் பிரச்சாரம் செய்கிற போது தி.மு.கவின் மீது மிகுந்த கோபத்தோடு பேசி பா.ம.க. இளைஞர்களை உணர்ச்சி பூர்வமாக திமுகவின் எதிர்ப்பு முனையை கூர்மையாக்கி பிரச்சாரம் செய்கிறார். டாக்டர் ராமதாஸ் அவர்கள் தனது மகனுக்கு எதிராக சென்டிமென்டாக பேசி களம் காண்கிறார். இருவர்களின் அரசியல் களம் எப்படி இருக்கும் என்பதை 2026 தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தும்.

திமுகவை பொறுத்தவரை தாங்கள் செய்த சாதனைகளை மக்களிடத்தில் சொல்லி தொண்டர்களிடம் இந்த தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் என்பதை உணர்த்த உணர்த்தி வைத்து திமுகவின் தலைவரும் முதலமைச்சர் ஆன மு க ஸ்டாலின் அவர்கள் களம் காண்கிறார் . அவருக்கு துணையாக துணை முதலமைச்சர் களத்தில் இயங்கி வருகிறார். உட்கட்சி பூசல் மாத்திரம் இல்லாமல் இருந்தால் எளிதாக 2026 தேர்தலில் வெற்றி காண எளிதாக இருக்கும்.

இந்த மாத இறுதிக்குள் அரசியல் கட்சிகள் அமைக்கப் போகும் கூட்டணியின் நிலை என்ன என்பது தெரிந்துவிடும். 2026ல் களம் காணும் அரசியல் கட்சிகள் எடுக்கின்ற வியூகங்கள் தெரிந்து விடும்.

## விழாக்கோலம் பூண்ட வள்ளுவர் கோட்டம்!

# மித்ரா குழும விழா கோலாகல கொண்டாட்டம்!



**பு**த்தாண்டு பிறந்த இரண்டு நாள் கழித்து 3ந்தேதி வள்ளுவர் கோட்டம் மாலை வேளையில் வண்ண அலங்கார விளக்குகள் ,வான வேடிக்கைகள், அலங்கார வளைவுகள், செண்டை மேளம் முழங்க வரவேற்பு, தங்கள் பிள்ளைகளோடு உற்சாகமாக வருகை தந்த பொதுமக்கள் என்று வள்ளுவர் கோட்டமே விழாக் கோலம் கொண்டு இருந்தது.

மித்ரா குழுமங்களில் ஒன்றான மித்ரா பிக்சர்ஸ் சார்பில் 99/66 NINTY NINE/SIXTY SIX படத்தின் இசை வெளியீட்டு விழாவும், HUSKYHOUSE படத்தின் துவக்க விழாவும் நடைபெற்றது.

விழாவின் சிறப்பு அழைப்பாளராக ஓய்வு பெற்ற நீதி யரசர்கள் டாக்டர் டி என் வள்ளிநாயகம் வி பெரிய கருப்பையா, ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு கே கருணாநிதி,

மூத்த வழக்கறிஞர் தேவகோட்டை காசிநாதன், பேராசிரியர் கு. ஞான சம்பந்தம் Kals நிறுவன குழுமங்களின் தலைவர் திரு கே. பி. கலியபெருமாள், ராதா எக்ஸ்போர்ட்ஸ் திரு கிருஷ்ணன், வித்யா விகாஸ் கல்வி நிறுவனங்களின் இயக்குனர்கள் திரு சுரேஷ் குமார், திரு சசி திரு குமாரவேல் , சாய் இண்டர்நேஷனல் எஸ். பாஸ்கர் உள்ளிட்ட தொழிலதிபர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள், கம்போடியா தமிழ் சங்கத் தலைவர், திரைப்படத் தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள், நடிகர்கள், நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.







அப்போது அவர்கள் வாழ்த்தி பேசியவை:

**கலைப்புலி எஸ்.தாணு**

"நான் எடுத்த முதல் படம் யார் என்ற திகில் படம். அது பெரிய வரவேற்பு பெற்றது. அதைவிட தொழில்நுட்பத்தில் சிறப்பாக இருந்திருக்கும் இந்த படம் வெற்றிபெற வாழ்த்துகிறேன். திரு. மூர்த்தி அவர்களின் நல்ல குணத்திற்கு அவர் மேலும் நன்றாக வர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்."

**மாண்புமிகு ஓய்வு பெற்ற நீதியரசர். T.N. வள்ளிநாயகம் அவர்கள்**

"திரு. மூர்த்தி அவர்களை பல ஆண்டுகளாக எனக்கு தெரியும். ஏற்கனவே கட்டுமான துறை தொழிலிலும், பத்திரிகை துறையிலும் சிறந்து விளங்கும் அவ சினிமாவிலும் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன்.

**இயக்குனர் ஆர்.பி.உதயகுமார்**

"கட்டிடம் கட்டும் துறையில் இருந்து திரைத்துறைக்கு வருகை தந்திருக்கிறார். அவரது கடின உழைப்பு குறித்து என்னிடத்தில் பல பேர் சொல்லி இருக்கிறார்கள் இப்போது நேரில் பார்க்கிறேன். எல்லா வகையிலும் அவர் எடுக்கும் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர். ஞானசம்பந்தம் :**

இந்த படத்தில் பேய் காட்சி பார்த்தோம் அதற்கு அடுத்து ஒரு காட்சியில் புத்தர் படத்தையும் பார்த்தோம் . புத்தர் என்றால் சாந்தம் அமைதி என்று சொல்வோம்.

அனைத்தும் ஒருங்கே இருக்கின்ற இந்த திரைப்படம் மிகப்பெரிய வெற்றி படமாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. இயக்குனர் பேரரசு:

திரைப்படங்களில் விபூதி குங்குமம் வைத்து நடிப்பதற்கு யோசிக்கும் காலத்தில் திரைப்பட தயாரிப்பாளர் மூன்று பக்தி பாடல்களை வைத்து படமெடுத்து இருப்பது அவருக்கு எனது வாழ்த்துக்களை பாராட்டுக்களும்










தெரிவித்துக் கொள்கிறேன்!

**ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு.வி. பெரிய கருப்பையா**

திரைப்படங்கள் பொதுமக்களிடையே mediation இருந்து குற்றங்களை கட்டுப்படுத்த வேண்டும். நீதித்துறையில் நிறைய வழக்குகள் இருப்பதால் அவ்வளவு எளிதில் குற்றங்களை குறைக்க முடியவில்லை. எனது திரைப்படங்கள் தங்கள் பங்களிப்பாக அதைச் செய்ய வேண்டும். இந்தப் படம் தயாரிப்பாளர் நிச்சயமாக செய்வார் என்று நம்புகிறேன் என்று தெரிவித்தார்.

**ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. கே. கருணாநிதி**

திரு. மூர்த்தி அவர்களின் முயற்சி என்பது நிச்சயம் பாராட்டுக்குரியது. அவரோடு பணியாற்றுபவர்களை அவர் அரவணைத்து செல்வதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். அவர் எல்லா வழியிலும் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**எண் கணித நிபுணர் Dr.J.N.S.மணியன்,**

இந்த ஆண்டு எல்லோருக்கும் சிறப்பான ஆண்டாகஇருக்கும்.காரணம்2026ன் கூட்டுத்தொகை 1 வருவதால் எல்லோரும் எல்லாவற்றிலும் நம்பர்.1 இருப்பார்கள் நம்முடைய மூர்த்தி அவர்களின் இந்தப் படம் நம்பர் 1 அமையும்.

நிகழ்ச்சியில் முல்லை –கோதண்டம் குழுவினரின் நகைச்சுவை நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து நடன இயக்குனர் ஸ்ரீதர் ,நடிகை ரச்சிதா மகாலட்சுமி நடிகர்கள் சபரி, ரோகித், ஆகியோர் தங்களது படப்பிடிப்பு அனுபவங்களை குறிப்பாக தயாரிப்பாளர் இயக்குனர் திரு.எம். எஸ் .மூர்த்தி அவர்களின் மனிதநேயத்தை பற்றி பாராட்டி பேசினார்கள்.

நிகழ்ச்சியை சுமையா தொகுத்து வழங்கினார். முடிவில் மித்ரா டைம்ஸ் செய்தி ஆசிரியர் விடாரண்யம் நன்றி கூறினார்.

# திரைப்பாடல்கள் மூலம் இலக்கியங்களை எளிமையாக சொன்னவர் கண்ணதாசன்!

அந்தக் காலத்தில் ஒரு கல்லூரிப் பேராசிரியை வானொலியில் பேசிக் கொண்டிருந்தார். பேசிக் கொண்டிருந்தார் என்று சொல்வதை விட அடித்து துவைத்து கிழித்துக் கொண்டிருந்தார் என்றே சொல்லலாம்.

கடுமையாக அவர் அப்படி தாக்கிப் பேசிக் கொண்டிருந்தது கண்ணதாசனை..!

ஆம் ... அடுக்கடுக்கான ஆதாரங்களோடு அந்தப் பெண் பேராசிரியர் வானொலியில் பேசிக் கொண்டிருந்தார்.

இதோ.. அது பற்றி அந்தப் பேராசிரியப் பெண்ணே சொன்னது:"ஒரு முறை சென்னை வானொலியில் 'இலக்கியங்களும் திரைப்படப் பாடல்களும்' என்ற தலைப்பில் ஒரு உரை நிகழ்த்த என்னை அழைத்திருந்தார்கள்.

நான் உரை நிகழ்த்தியபோது, இலக்கியங்களில் சொல்லப்பட்ட பல விஷயங்களை கவிஞர் கண்ணதாசன் எப்படி தன் பாடல்களில் எடுத்துக் கையாண்டிருந்தார் என்பதைச் சொல்லி





விளக்கி, கிட்டத்தட்ட கண்ணதாசன் பண்டைய இலக்கியங்களில் இருந்து நிறைய காப்பியடித்துள்ளார் என்கிற ரீதியில் என்னுடைய உரை நிகழ்த்தினேன்.

ஒலிப்பதிவு செய்யப்பட்டு இரண்டு நாள் கழித்து என்னுடைய உரை வானொலியில் ஒலிபரப்பானது." அவ்வளவுதான் ..!

அடுக்கடுக்காக போன் கால்கள் ..!

யார் யாரோ போன் செய்து பாராட்டினார்கள் ..!

"சபாஷ்.. இத்தனை காலம் இதை கண்ண தாசனே சொந்தமாக எழுதி இருக்கிறார் என நினைத்துக் கொண்டிருந்தோம்.

நீங்கள் எடுத்துச் சொன்ன பிறகுதான், இலக்கியங்களில் இருந்து இதையெல்லாம் காப்பி அடித்திருக்கிறார் கண்ணதாசன்

என்பது தெரிகிறது..

அற்புதமாக பேசினீர்கள்..!"

இந்த தினுசில் பலரது பாராட்டுக்களும் போன் கால்கள் மூலமாக வந்து குவிந்து கொண்டே இருக்க, உச்சி குளிர்ந்து போனது அந்தப் பெண்ணுக்கு ..!

மறுபடியும் ஒரு போன் கால்! "இது யாருடைய பாராட்டோ ..?" என பரவசத்துடன் போனை எடுத்தார் அந்தப் பேராசிரியப் பெண். மறுமுனையில் ஒலித்த குரல்: "நான் கண்ணதாசன் பேசுகிறேன்.."

பதறிப் போனார் அந்தப் பெண். அவருக்கு கையும் ஓடவில்லை .. காலும் ஓடவில்லை..!

உலர்ந்து போன உதடுகள் ஒட்டிக் கொள்ள, போனைப் பிடித்திருந்த கை நடு நடுங்க "சொல்லுங்க சார் .."

தொடர்ந்து கண்ணதாசன் : "சற்றுமுன்னர் வானொலியில் உங்களின் உரை கேட்டேன் மிக அருமையாக பேசியிருந்தீர்கள்.

ஒரு விஷயத்தை உங்களுக்கு தெளிவு படுத்த விரும்புகிறேன். பண்டைய இலக்கியங்களிலும் இதிகாசங்களிலும் சொல்லப்பட்டிருக்கும் பல நல்ல விஷயங்கள்,

உங்களைப்போன்ற பேராசிரியர்கள், பண்டிதர்கள் மட்டத்தோடு நின்று விடுகின்றன. ஆனால் திரைப்படப் பாடல்கள் என்பது நாட்டின் கடைக்கோடியில் குக்கிராமத்தில், பள்ளிக்கூடமே போகாத, மாடு மேய்க்கும் சிறுவன் வரை சென்றடையக்கூடிய வலிமை பெற்றது.

அதனால் இலக்கியங்களில் சொல்லப்பட்ட பல நல்ல விஷயங்கள் அவர்களையும் சென்று சேர வேண்டும் என்று அவற்றை எளிமைப்படுத்தி தருகிறேன்.

உதாரணமாக, திருமணங்களில் ஓதப்படும் சமஸ்கிருத வேத மந்திரங்களில், கணவன் மனைவிக்கிடையேயான மன ஒற்றுமையை எடுத்துக்காட்ட 'நான் மனமாக இருந்து நினைப்பேன்... நீ வாக்காக இருந்து பேசு' என்று ஒரு வரி வரும். அது நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்..?

ஆனால் அதையே நான் "நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்"



என்று எழுதியபோது பெரும்பாலான மக்களை சென்று அடைந்தது. இது தவறு என்று சொல்கிறீர்களா?"

ஆல் இந்தியா ரேடியோவில் ஆரவாரமாக பேசிய அந்தப் பெண், இப்போது அடுத்த முனையில் பேசிக் கொண்டிருந்த கண்ணதாசனுக்கு பதில் சொல்ல முடியாமல் தடுமாறினார் : "மன்னித்துக் கொள்ளுங்கள் சார்.."

இந்த நிகழ்வை பத்திரிகைகளில் பகிர்ந்து கொண்ட அந்த பேராசிரிய பெண் சொன்ன முத்தாய்ப்பு வார்த்தை. "கண்ணதாசன் சொன்னதைக் கேட்டது முதல் அவர் மேல் எனக்கிருந்த மதிப்பு பல மடங்கு அதிகரித்து விட்டது".

இந்தப் பேராசிரியைக்கு கண்ணதாசன் மீது மதிப்பு அதிகரிக்க காரணம் ...

அவர் பேச்சில் இருந்த எளிமை உண்மை..!

அடுத்த காரணம் திரை உலகின் உச்சத்தில் இருந்த காலத்திலும், இந்தப் பெண்ணுக்கு அவரே போன் செய்து , தன் தரப்பு நிலையை விளக்கிச் சொன்ன பண்பு.. பணிவு..!

ஆம் ..!

"உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால்உலகம் உன்னிடம் மயங்கும்!

# உயில் மெய்ப்பித்தல் (WILL LAW) தொடர்பான சட்டப்பிரிவு நீக்கம்!

**செ**ன்னை, மும்பை, கொல்கத்தாவில் வசிப்பவர்கள் உயில்களை 'மெய்ப்பிக்க' நீதிமன்றம் செல்ல வேண்டியது இல்லை

மத்திய அரசின் புதிய சட்டத்திருத்த மசோதாவின்படி சென்னை, மும்பை, கொல்கத்தாவில் வசிக்கும் மக்கள் வாரிசுரிமை சட்டத்தின் கீழ் உயில்களை மெய்ப்பிக்க நீதிமன்றம் செல்ல வேண்டிய கட்டாயம் இல்லை என்றாலும் விரும்பினால் தாமாக முன்வந்து மெய்ப்பித்துக்கொள்வது அறிவார்ந்த செயல் என் சட்ட நிபுணர்கள் விளக்கம் தெரிவித்துள்ளனர்.




பொதுவாக உயில் என்பது ஒருவர் தனது இறப்புக்குப்பிறகு தனது சொத்துக்கள் மற்றும் உடைமைகள், பொறுப்புகள் யார், யாருக்குச் செல்ல வேண்டும், அதை எப்படி பங்கிட வேண்டும் என்பதை சட்டப்படி எழுதி வைக்கும் ஒரு ஆவணமாகும். இது சொத்துரிமை தொடர்பான சண்டைகளைத் தவிர்க்கவும், தனது விருப்பங்களை நிறைவேற்றவும், சொத்துகளை நிர்வகிக்கும் பொறுப்பாளரை நியமிக்கவும் சட்டரீதியாக உதவுகிறது.



'வில் புரோபேட்' எனப்படும் எழுதப்பட்ட உயிலை மெய்ப்பித்தல் என்பது ஒருவர் எழுதி வைத்துள்ள உயில் சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும் என்பதை நீதிமன்றம் மூலம் உறுதிப்படுத்தும் ஒரு சட்ட செயல்முறையாகும். மெய்ப்பித்தல் என்ற நீதிமன்ற உத்தரவுப்படி அந்த உயிலுக்கு உரிய சட்டஅங்கீகாரம் கிடைக்கிறது. இவ்வாறு மெய்ப்பித்தால் மட்டுமே வாரிசுகளுக்கிடையே ஏற்படும் சொத்து தகராறுகள், தேவையற்ற வழக்குகள் தவிர்க்கப்படுவதோடு எழுதி வைத்தவரின் நோக்கமும் நிறைவேறும்.

இந்திய வாரிசுரிமை சட்டத்தின் (1925) பிரிவு 213ன்கீழ் ஆங்கிலேயர்கள் காலத்தில் பழமையான பிரசிடென்சி நகரங்களாக இயங்கி வந்த சென்னை, மும்பை, கொல்கத்தா ஆகிய பெருநகரங்களில் வசிக்கும் இந்துக்கள், சீக்கியர்கள், பவுத்தர்கள்,சமணர்கள், பார்சியர்கள் மட்டும் தங்களது சொத்துகள் இந்த பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் இருந்தாலோ அல்லது இந்த பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் வசித்தாலோ தாங்கள் எழுதி வைத்த உயிலை நீதிமன்றத்தில் மெய்ப்பிப்பது கட்டாயம் என்று இருந்தது.

ஆனால் இந்த 3 பெருநகரங்களைத் தவிர்த்து இந்தியாவின் மற்ற பகுதிகளில் வசிப்பவர்களுக்கு இதுபோன்ற எந்தவொரு கட்டாயமும் இல்லை. இந்த காலனித்துவ பாகுபாட்டை அகற்றும் வகையில் தற்போது மத்திய அரசு சென்னை, மும்பை, கொல்கத்தா எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கான இந்த 213வது சட்டப் பிரிவை அறவே நீக்கியுள்ளது. இதன்மூலம் உயில்களை மெய்ப்பிக்க நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் இல்லை. இதற்காக நீதிமன்ற கட்டணமாக சொத்து மதிப்பில் 2 முதல் 5 சதவீதம் வரை செலுத்தவேண்டிய தேவையும் இல்லை. உயில் அங்கீகாரம் பெறுவதற்கான வழக்குதொடர்ந்து நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை.

ஆனால் இதுபோல உயில்களை மெய்ப்பித்தல் சட்டப்படி கட்டாயம் இல்லை என்றாலும், வரும் காலத்தில் பிரச்சினை ஏற்படும் எனக் கருதினால், அல்லது விரும்பினால் தாமாக முன்வந்து மெய்ப்பித்துக்கொள்ளலாம் என்கின்றனர் சட்ட நிபுணர்கள். இதுதொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற சட்ட நிபுணர்கள் கூறியது: மத்திய அரசு தற்போது வாரிசுரிமை சட்டத்தின் பிரிவு 213ஐ மட்டுமே நீக்கியுள்ளது. ஆனால் அதனுடன் தொடர்புடைய 57(2) என்ற பிரிவில் கைவைக்கவில்லை. இந்த பிரிவானது இந்த 3 நகரங்களிலும் எப்போது, எந்த சூழ்நிலையில் அந்த உயிலை மெய்ப்பிப்பது கட்டாயம் என வரையறை



செய்கிறது. பெரும்பாலான சூழலில் அது கட்டாயமில்லை என்ற விதிவிலக்கும் வாரிசுரிமை சட்டத்தில் உள்ளது. இதனால் இந்த 3 நகரங்களிலும் உயில்களை மெய்ப்பித்தல் என்பது கட்டாயமானதா, இல்லையா என்ற மற்றொரு குழப்பம் நீடிக்கிறது.

ஆனால் வங்கிகள், நிதி நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள் தங்களின் விதிமுறைகளின்படி உயில் சட்டப்படி நீதிமன்றத்தில் மெய்ப்பிக்கப்பட்டு இருந்தால் மட்டுமே டிபாசிட் தொகையையோ அல்லது பங்குகளையோ வாரிசுதாரர்களிடம் ஒப்படைக்கும். குடும்ப உறுப்பினர்கள் வெளிநாடுகளில் வசித்தால் பிற்காலத்தில் சொத்துரிமை கோருவதில சிக்கல் வராமல் இருக்க உயில்களை மெய்ப்பித்துக் கொள்வதும் பாதுகாப்பானது.

அதேபோல, பிரிவு 213 நீக்கம் தொடர்பான சட்டத்திருத்தம் முன்தேதியிட்டு அமல்படுத்தப்படவில்லை என்பதால் ஏற்கெனவே நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள உயில் தொடர்பான வழக்குகள் தொடர்ந்து நடைபெறும். தற்போதுபிரிவு 213 நீக்கப்பட்டுள்ளதால் இனி இந்த 3 பெருநகரங்களில் வசிப்போர் உயில்களை மெய்ப்பிக்க நீதிமன்றபடியேறுவது கட்டாயம் இல்லை. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**- குணசேகரன்**





# மனிதநேயம் உள்ள குடல் நோய் மருத்துவர் தஞ்சை முரளி!

தஞ்சாவூரைச் சேர்ந்த முரளி, குடல் நோய் சிகிச்சை நிபுணர். வணிக நோக்கமின்றி அறத்தோடு இயங்கும் மனிதநேயத்துடன் அணுகும் மருத்துவர். எளிய மக்களிடம் சிகிச்சைக்கு இவர் எந்தக் கட்டணமும் வாங்குவதில்லை. வரவேற்பறையில் இருக்கும் உண்டியலில் விரும்பிய தொகையைப் போட்டுச் செல்லலாம். இல்லாதவர்கள் போடாமலும் செல்லலாம். எண்டோஸ்கோபி உட்பட எல்லா சோதனைகளுக்கும் குறைவான கட்டணம்தான். அதுவும் இயலாதோருக்கு விலக்கு உண்டு. ஒவ்வொரு நோயாளருக்கும் தகுந்த நேரம் தந்து நிதானமாகப் பேசி நம்பிக்கையளிப்பதால் மக்கள் இவரைக் கடவுளின் மறு உருவாகவே காண்கிறார்கள். இவர் மீட்ட குடிநோயாளிகளின் எண்ணிக்கை ஏராளம் ஏராளம். மருத்துவத்தை சேவையென்றே கொள்கை வகுத்து இயங்கும் இவர், 'அர்ப்பணம்' என்ற அறக்கட்டளையையும் நடத்துகிறார். மக்களின் மனதுக்கு நெருக்கமான இந்த மனிதநேய மருத்துவரை அரவணைத்து மகிழ்கிறார்கள் தஞ்சாவூர் பகுதி வாழ் மக்கள்.



# உயிர் காக்கும் சிறுநீரகம் காப்போம்!

"நோய்நாடி நோய்முதல் நாடி" என்ற வள்ளுவரின் வாக்குப்படி, நோயின் வேரை அறிந்து செயல்பட்டால், சிறுநீரக செயலிழப்பு (Kidney Failure) என்ற பெரும் அரக்கனை நாம் எளிதாக வெல்லலாம். இன்று இளம் வயதிலேயே பலரும் டயாலிசிஸ் நிலைக்குத் தள்ளப்படுவது வேதனைக்குரியது. ஆனால், இயற்கையோடு இணைந்த வாழ்வியல் மாற்றங்கள் மூலம் நம் சிறுநீரகத்தை நிச்சயம் மீட்டெடுக்க முடியும் என்கிறார் வெல்னஸ் குருஜி டாக்டர் கௌதமன்.

இதோ, உங்கள் ஆரோக்கியத்தை மீட்டெடுக்கும் ஆன்மீக மற்றும் மருத்துவ வழிகாட்டல்!

சிறுநீரகம் ஏன் செயலிழக்கிறது?

சிறுநீரகம் என்பது கழிவுகளை வெளியேற்றும் உறுப்பு மட்டுமல்ல, உடலுக்குத் தேவையான சத்துக்களைத் தக்கவைக்கும் பொக்கிஷமும் கூட. அது பழுதடைய முக்கிய 5 காரணங்கள்

கல்லீரல் குறைபாடு (Liver Health) அண்ணன் தம்பி போல செயல்படும் கல்லீரலும் சிறுநீரகமும் ஒன்றையொன்று சார்ந்தவை. கல்லீரல் பலவீனமானால் சிறுநீரகம் பாதிப்படையும்.

பால் வடிகட்டியில் வேகமாக நீரை ஊற்றினால் அது கிழிந்துவிடும். அதுபோலவே, அதிக இரத்த அழுத்தம் சிறுநீரக வடிகட்டிகளைச் சிதைக்கிறது.


சிறுநீரில் நுரை வருவது இதன் ஆரம்ப அறிகுறி. சர்க்கரை நோய் சிறுநீரகத்தின் முதல் எதிரி.

"விருக்கோதரம்" என்று ஆயுர்வேதம் அழைக்கும் சிறுநீரக நோய்க்கு, இரவில் தூங்காமல் விழித்திருப்பதே முக்கிய காரணம்.

மருத்துவரின் ஆலோசனையின்றி எடுக்கும் வலி நிவாரணிகள் மற்றும் ஸ்டீராய்டு மருந்துகள்.

சிறுநீரகம் அபாய கட்டத்தை நெருங்குகிறது என்பதை இந்த அறிகுறிகள் மூலம் அறியலாம்

நீர் வெளியேற்றத்தில் மாற்றம்: குடிக்கும் தண்ணீரின் அளவிற்கு ஏற்ப சிறுநீர் வெளியேறாமை.முகம், கை,



கால்களில் திடீர் வீக்கம்.

இரத்த சோகை (Anemia): காரணமே இல்லாமல் ஹீமோகுளோபின் குறைவது.

சிறிது தூரம் நடந்தாலே மூச்சு வாங்குவது.

முகம் மற்றும் உடலில் கரும்புள்ளிகள், பொலிவின்மை.

நீங்கள் டயாலிசிஸ் செய்து கொண்டிருப்பவராக இருந்தாலும் சரி, சிறுநீரகத்தைப் பாதுகாக்க நினைப்பவராக இருந்தாலும் சரி, இந்த 10 வழிமுறைகள் ஒரு வரப்பிரசாதம்:

தண்ணீரை முறைப்படுத்துங்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி, உடலுக்குத் தேவையான அளவு தண்ணீரை மட்டுமே குடிக்க வேண்டும். இது சிறுநீரகத்தின் சுமையைக் குறைக்கும். உப்பு நீர்ச்சத்தை உடலில் தேக்கிவிடும். உப்பில்லா உணவு அல்லது குறைந்த உப்பு சிறுநீரகத்திற்கு நல்லது.

இதயத்தை கவனியுங்கள் இதயம் சீராக இயங்கினால் தான் சிறுநீரகத்திற்குச் சீரான இரத்த ஓட்டம் கிடைக்கும்.

கல்லீரலை அவ்வப்போது சுத்தம் செய்வது சிறுநீரகத்திற்குப் பெரும் உதவியாக இருக்கும்.


எஸ்.ஜானகி

இரவு 6-7 மணி நேர ஆழ்ந்த உறக்கம், உறுப்புகளைத் தாமாகவே புதுப்பித்துக்கொள்ளும்.

தசைகள் கரைவதைத் தடுக்க தினமும் குறைந்தது 1000 முதல் 2000 அடிகள் நடப்பது அவசியம்.

அசைவ உணவுகளைத் தவிர்ப்பது அல்லது குறைப்பது நல்லது. பாஸ்பரஸ் நிறைந்த உணவுகள் இரத்தத்தை உறைய வைக்கும்.

குக்கர் சாதத்தைத் தவிர்த்து, பானையில் வடித்துச் சமைத்த சாதம் மற்றும் வேகவைத்த காய்கறிகளே சிறந்தது. வெளிப்புற சிகிச்சைகள் சிறுநீரகப் பகுதியில் இஞ்சி ஒத்தடம் அல்லது வசம்பு பத்து போடுவது சிறுநீரகச் செயல்பாட்டைத் தூண்டும். மருத்துவர் ஆலோசனையுடன் "விருக்கா" (Virukka) போன்ற மூலிகை மருந்துகள் இயற்கை டயாலிசிஸ் போல செயல்பட்டு கழிவுகளை வெளியேற்றும்.

"வருமுன் காப்பதே சிறந்தது." வருடத்திற்கு ஒருமுறையாவது ஆயுர்வேத முறைப்படி உடல் சுத்தி (Detox) செய்துகொள்வது பரம்பரை நோய்களையும் தடுக்கும். பயம் வேண்டாம்! விழிப்புணர்வோடு செயல்பட்டால், நோயற்ற பெருவாழ்வு நிச்சயம் சாத்தியமே.




# Gmail பயன்படுத்துவதில் புதிய நடைமுறை அறிமுகம்!

நீங்கள் தற்போது பயன்படுத்தி வரும் Gmail மின்னஞ்சல் முகவரியை (Email ID) மாற்றிக்கொள்ளும் வாய்ப்பை Google வழங்கத் தொடங்கியுள்ளது.

மின்னஞ்சல் முகவரியை மாற்றிய பிறகு, புதிய ஐடி உங்கள் முதன்மை (Main) Gmail ஐடி ஆக செயல்படும்.

பழைய ஐடி ஒரு Alias (துணை) ஐடி ஆக இருக்கும்.

இந்த இரண்டு ஐடிகளிலும் எதைக் கொண்டு வேண்டுமானாலும் Login செய்யலாம்

உங்கள் Google Drive, Google Photos, மற்ற Google சேவைகளில் உள்ள தரவுகள் எதுவும் மாற்றப்படாது.

எந்த Gmail ஐடி மூலம் நுழைந்தாலும், உங்கள் அனைத்து தகவல்களையும் முழுமையாக அணுக முடியும்

உதாரணமாக Vida.gmail.com என்ற ஐ.டியை Vida2.@gmail.com என மாற்றிக்கொள்ளலாம்.

12 மாதக் கட்டுப்பாடு ஒருமுறை Gmail ஐடி மாற்றினால், அடுத்த 1 வருடத்திற்கு மீண்டும் மாற்ற முடியாது.

எண்ணிக்கை வரம்பு உங்கள் வாழ்நாளில் 3 முறை மட்டுமே இவ்வாறு Gmail ஐடியை மாற்ற அனுமதி.

**இந்த வசதி தற்போது எங்கு?**

இந்த வசதி தற்போது சோதனை (Testing) முறையில்

இந்தியா உட்பட சில நாடுகளில் அறிமுகமாகத் தொடங்கியுள்ளது.

உங்கள் கணக்கில் வந்துள்ளதா என்பதை எப்படி பார்க்கலாம்?

1. Google Account Settings
2. Personal Info
3. Email

இந்த பகுதியிலே சென்று சரிபார்க்கலாம்

# ஊரைப் பாதுகாக்கும் கோயில் கோபுர கலசம்!
## – அறிவியல் ரீதியான உண்மை!

**கோ**புர கலசம் கோடி புண்ணியம் என்பார்கள். இறை நம்பிக்கை உள்ளவர்கள் அப்படி சொன்னாலும் அறிவியல் பூர்வ ஆராய்ச்சியில் அது பலரின் உயிரை காக்கிறது என்பது வியப்புக்குரிய ஒன்றாகும்.

கோயில்களையும் உயரமான கோபுரங்களையும் அதன் மேல் இருக்கும் கலசங்களையும் பார்த்திருப்பீர்கள். அதற்குப் பின்னால் எவ்வளவு பெரிய அறிவியல் ஒளிந்திருக்கிறது என்பதை தெரிந்து கொள்ளும்போது அந்தக் கால கட்டிடக்கலையின் பெருமை தெரிய வருகிறது.

கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி, செப்பு அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும்.

இக்கலசங்களிலும் அதில் கொட்டப்படும் தானியங்களும், உலோகங்களும் மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியினை (earth) கலசங்களுக்கு கொடுக்கின்றன. (நெல், கம்பு, கேழ்வரகு, திணை, வரகு, சோளம், மக்காசோளம், சாமை, எள்)ஆகியவற்றை கொட்டினார்கள்.

குறிப்பாக வரகு தானியத்தை அதிகமாக கொட்டினார்கள். காரணத்தை தேடிப்போனால் ஆச்சரியமாக இருக்கிறது,

"வரகு" மின்னலை தாங்கும் அதீத ஆற்றலை பெற்றுள்ளது என இப்போதைய அறிவியல் கூறுகிறது.

பனிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை குடமுழுக்கு விழா என்ற பெயரில் "கலசங்களில் இருக்கும் பழைய தானியகள் நீக்கப்பட்டு புதிய தானியங்கள் நிரப்பபடுகிறது",

ஒரு இடத்தில் எது மிக உயரமான இடத்தில் அமைந்த இடி தாங்கியோ அது தான் முதலில் "எர்த்" ஆகும். மேலும், அது எத்தனை பேரைக் காப்பாற்றும் என்பது அதன் உயரத்தைப் பொறுத்தது. அடிப்படையில் கலசங்கள் இடிதாங்கிகள்.

உதாரணமாக கோபுரத்தின் உயரம் ஐம்பது மீட்டர் என்றால் நூறு மீட்டர் விட்டம் அடைக்கும் பரப்பில் எத்தனை பேர் இருந்தாலும் அவர்கள் இடி தாக்காமல் காக்கப்படுவார்கள். அதாவது சுமார் 7500 சதுர மீட்டர் பரப்பில் இருக்கும் மனிதர்கள் காப்பாற்றப்படுவார்கள்!

சில கோயில்களுக்கு நான்கு வாயில்கள் உள்ளன, அது நாலாபுறமும் 7500 சதுர மீட்டர் பரப்பளவை காத்துக்கொண்டு நிற்கிறது!!! இது ஒரு தோராயமான கணக்கு தான், இதை விட உயரமான கோபுரங்கள், இதை விட அதிகமான பணிகளை சத்தமில்லாமல் செய்து வருகின்றது!!





# சிகரெட் விலை உயர்வு!
## பயன்பாடு குறையும் என்று அரசு எதிர்பார்ப்பு!

மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள புதிய அரசாணையின்படி, சிகரெட் உள்ளிட்ட புகையிலை பொருட்கள் மீதான கூடுதல் கலால் வரி சட்டத்திருத்தம் வரும் பிப்ரவரி 1ஆம் தேதி முதல் நாடு முழுவதும் அமலுக்கு வருகிறது.

2025ஆம் ஆண்டு நாடாளுமன்றக் குளிர்கால கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட 'கலால் திருத்த மசோதா 2025'ன் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிகரெட், சுருட்டு மற்றும் ஹுக்கா போன்ற புகையிலை பொருட்களின் விலை பிப்ரவரி முதல் கணிசமாக உயரப்போவது உறுதியாகியுள்ளது.

புதிய வரி விதிப்பின்படி, சிகரெட்டுகளின் நீளம் மற்றும் வகையைப் பொறுத்து விதிக்கப்படும் கலால் வரி பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை 1,000 சிகரெட்டுகளுக்கு ரூ. 200 முதல் ரூ. 735 வரை வசூலிக்கப்பட்ட வரி, இனி ரூ. 2,050 முதல் அதிகபட்சமாக ரூ. 8,500 வரை வசூலிக்கப்படும். இந்த அதிரடி மாற்றத்தால் சில்லறை விற்பனையில் ஒரு சிகரெட்டின் விலை முன்னெப்போதும் இல்லாத வகையில் உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிகரெட் மட்டுமின்றி மற்ற புகையிலை பொருட்களுக்கும் வரி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. மெல்லும் புகையிலை (Chewing Tobacco) மீதான வரி 25 சதவீதத்திலிருந்து 100 சதவீதமாகவும், ஹுக்கா புகையிலை வரி 25 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. குறிப்பாக பைப் சிகரெட்டுகளுக்கான புகை கலவைகள் மீதான வரி 60 சதவீதத்திலிருந்து 325 சதவீதமாக உச்சகட்ட உயர்வைச் சந்தித்துள்ளது. இந்த வரி உயர்வு புகையிலை பயன்பாட்டைக் குறைத்து பொதுமக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.




# சிம் கார்டு இல்லாமல் வாட்ஸ் அப் பயன்படுத்த முடியாது! -மத்திய அரசின் புதிய கட்டுப்பாடு!

சமூக வலைத்தளங்களான வாட்ஸ்ஆப், டெலிகிராம், சிக்னல் போன்றவற்றுக்கு சிம் கார்டு வெரிபிகேஷன் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதுவரை எந்த செல்போன் எண்ணைப் பயன்படுத்தியும் எந்த செல்போனிலும் சமூக வலைத்தளங்களை இயக்கலாம். ஆனால், இனி வாட்ஸ்ஆப் போன்றவை அந்த சிம் கார்டு இருக்கும் செல்போனில் மட்டுமே இயங்கும் வகையில் மாற்றப்பட்டுள்ளது.

பான் ஆதார் இணைப்புக்கு நேற்று முன்தினம் கடைசி நாள் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி பான் கார்டு ஆதார் இணைக்காதவர்களின் பான் கார்டு இனி செயலற்றதாகிவிடும் என்று கூறப்படுகிறது. இதனால் வருமானவரி செலுத்துவது, பெரிய அளவிலான வங்கி பரிமாற்றம் செய்வதில் சிக்கல் எழக்கூடும். எனவே, இணைக்காதவர்கள் அதற்கான அபராதம் செலுத்தி பான் எண்ணை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டு வரும் நடவடிக்கையில் ஈடுபடுங்கள்.

வாடிக்கையாளர்களின் கிரெடிட் ஸ்கோர் 15 நாள்களுக்கு ஒரு முறை அப்டேட் செய்யப்பட்டு வந்தது. ஆனால், இதில் சில குளறுபடிகள் நேரிடுவதாக எழுந்த புகார்களைத் தொடர்ந்து, இனி ஒவ்வொரு வாரமும் கிரெடிட் ஸ்கோர் அப்டேட் செய்யப்படும். எனவே, தவணை செலுத்தாதது, தவணை தாமதமாவது போன்றவை உடனுக்குடன் சிபில் ஸ்கோர் எனப்படும் கிரெடிட் ஸ்கோரில் அப்டேட் செய்யப்படும்.

2026ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி முதல் மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதிய விகிதங்களில் மாற்றம் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, இதுவரை 7வது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் அமலில் இருந்தன. 2025, டிசம்பர் 31ஆம் தேதியுடன் 7வது ஊதியக்குழு பரிந்துரைகள் நிறைவுக்கு வருகிறது. எனவே, ஜனவரி முதல் 8வது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைக்கு வரவிருக்கின்றன. இதனால் அரசு ஊழியர்களின் ஊதிய விகிதங்கள் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சிவாஜி ரசிகர்கள் மீது எம்ஜிஆர் காட்டிய அக்கறை!

## – திரும்பிப் பார்க்கிறேன் புத்தகத்தில் டைரக்டர் ஸ்ரீதர் தகவல் !

**எம்.**ஜி.ஆர் சிவாஜி இருவரும் ஒன்றாக இணைந்து நடித்த ஒரே படம் கூண்டுக்கிளிகள். அதற்குப் பின் அவர்கள் இருவரும் இணைந்து நடிக்கவில்லை அரசியலில் இரு துருவங்களாக இருந்தவர்கள். அதன் அடிப்படையில் இருவரது ரசிகர்களும் ஒற்றுமையாக இருந்ததில்லை. இருவருக்கும் இடையே

சினிமா அரசியல் இரண்டையும் தாண்டி அண்ணன் தம்பி என்ற உறவோடு பழகியது உண்டு.

பரணி ஸ்டூடியொாவில் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்தபோது, ஒரு காட்சி முடிந்து, அடுத்த காட்சிக்காக லைட் அட்ஜெஸ்மண்ட் நடந்து கொண்டிருந்தது. நானும் சிவாஜியும் எதிரெதிரே உட்கார்ந்து, பேசிக் கொண்டிருந்தோம். ஸ்டோடியோவில் நுழைவாயிலை நோக்கியபடி உட்கார்ந்திருந்த எனக்கு திடீரென்று ஒரு அதிர்ச்சி.கேட்டை திறந்து கொண்டு திமுதிமுவென ஐம்பது, அறுபது இளைஞர்கள் உள்ளே நுழைந்து எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.



அடுத்தாற்போல் அந்த கூட்டத்துடன் வந்துகொண்டிருந்த மனிதரைப் பார்த்தவுடன் மேலும் அதிர்ச்சி."அண்ணே திரும்பிப் பாருங்க. எம்.ஜி.ஆர். ஐம்பது அறுபது பேரோட வந்துகிட்டு இருக்காரு" என்றேன். திரும்பிப் பார்த்த சிவாஜிக்கும் எம்.ஜி.ஆர். ஏன் இப்போது, இத்தனை பேருடன் இங்கே வருகிறார் என்று புரியவில்லை. இதற்குள் எம்.ஜி.ஆர் எங்களை நெருங்கிவிட்டார். "அண்ணே வாங்க வாங எங்க இவ்வளவு தூரம்?"என்றேன். தம்முடன் வந்த இளைஞர்களைக் காட்டி "இவங்களெல்லாம் உங்க ரசிகர்களாம். காலையில் ஸ்டூடியோவைத் தாண்டிப் போகிறபோது, இவங்களெல்லாம் ஸ்டூடியோவுக்கு வெளியில் நிற்கறதைப் பார்த்தேன். இப்போ திரும்பிப் போகிறபோதும் பார்த்தேன்.வெளியிலேயே நின்னுகிட்டு இருந்தாங்க. அதான் உங்களை சந்திக்கட்டுமேன்னு உள்ளே கூட்டிக்கிட்டு வந்தேன். நான் வரட்டுமா?" என்று கூறி விடைபெற்றார். அந்த ரசிகர்கள் புறப்பட்டு போனபின் சிவாஜி தமாஷாய் , "என்னோட இந்த ரசிகர்களில் பாதிபேர் எம்.ஜி.ஆர் ரசிகரா இன்னியிலே யிருந்து மாறிடுவாங்க" என்றார்.

சிவாஜி ரசிகர்கள் என்று தெரிந்தும், சிவாஜியை அவர்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்ததை எம்.ஜி.ஆரின் பெருந்தன்மை என்பதா? ராஜதந்திரம் என்பதா?"



# தூங்காவிட்டால் மூளை பாதிக்கும்! – அதிர்ச்சி தரும் அறிவியல் தகவல்!

குறைவான தூக்கம் உங்கள் மூளையை சோர்வடையச் செய்வது மட்டுமல்ல, அது மூளையின் கட்டமைப்பையே சிதைக்கத் தொடங்குகிறது.

புதிய நரம்பியல் ஆய்வுகளின்படி, தொடர்ச்சியான தூக்கமின்மை மூளையின் நோய் எதிர்ப்பு மண்டலத்திற்குள் ஒரு ஆபத்தான மாற்றத்தைத் தூண்டுகிறது.

நாம் தொடர்ந்து தூக்கத்தைத் தவிர்க்கும்போது, மூளையில் உள்ள கழிவுகளை அகற்றும் மற்றும் நரம்பு மண்டலத்தைப் பாதுகாக்கும் அஸ்ட்ரோசைட்டுகள் (Astrocytes) மற்றும் மைக்ரோகிளியா (Microglia) செல்கள் அதிகப்படியான சுறுசுறுப்பு அடைகின்றன.

சாதாரணமாக, இந்த அஸ்ட்ரோசைட்டுகள் தேவையற்ற நரம்பு இணைப்புகளைச் சீரமைத்து மூளையைத் திறம்படச் செயல்பட வைக்கும். ஆனால் தூக்கமில்லாத நேரங்களில் இவை அதீத வேகத்தில் செயல்பட்டு, ஆரோக்கியமான நரம்பு இணைப்புகளையே அழிக்கத் தொடங்குகின்றன.

எளிமையாகச் சொன்னால், மூளை தனது சொந்த தகவல் தொடர்பு நெட்வொர்க்கையே "சாப்பிட" ஆரம்பிக்கிறது. அதே வேளையில், மைக்ரோகிளியா செல்கள் மூளையில் வீக்கத்தை (Inflammation) உண்டாக்குகின்றன. இது பிற்காலத்தில் நரம்பியல் நோய்கள் ஏற்பட முக்கிய காரணமாகிறது.

இதன் விளைவுகள் வெறும் கவனச்சிதறலோடு நின்றுவிடுவதில்லை. தொடர்ச்சியான தூக்கமின்மை என்பது:

புதிய நினைவாற்றல் உருவாவதைத் தடுக்கிறது.

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் திறனைச் சிதைக்கிறது.

ஹார்மோன் சமநிலையை மாற்றுகிறது.

அல்சைமர் (Alzheimer's) போன்ற நோய்கள் வரும் அபாயத்தை அதிகரிக்கிறது.

தூக்கம் என்பது வெறும் ஓய்வு நேரம் மட்டுமல்ல; அது உங்கள் மூளையின் நோய் எதிர்ப்பு மண்டலத்தைச் சீராக வைத்திருக்க உதவும் ஒரு அத்தியாவசிய உயிரியல் பழுதுபார்ப்புப் பணியாகும். தூக்கத்தைத் தொடர்ந்து தவிர்ப்பது உங்கள் மூளையின் நீண்டகால ஆரோக்கியத்தையே சீர்குலைக்கும்.



# திட்டமிடுதல், உழைப்பு, சிந்தனைத் திறன் மூன்றும் சேர்ந்தால் வெற்றி நிச்சயம்!

ஒரு நகரத்தில் ஒரு சட்டமிருந்தது. அதன்படி யார் வேண்டுமென்றாலும் அந்த நகரத்திற்கு மன்னனாக வரமுடியும். ஆனால், அந்தப் பதவி ஐந்தாண்டுகள் மட்டுமே!

ஐந்தாண்டு முடிந்த அடுத்த நாளே அந்த மன்னனை ஆற்றின் கரைக்கு மறுபுறம் உள்ள காட்டில் விட்டுவிடுவார்கள்.அந்தக் காட்டில் மனிதர்கள் கிடையாது.

வெறும் கொடிய விலங்குகள் மட்டுமே! மன்னன் காட்டிற்குள் நுழைந்தால் போதும்; வனவிலங்குகள் கொன்று தீர்த்துவிடும்.

இந்த சட்டத்தை யாராலும் மாற்ற இயலாது. இந்த நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டவன் மட்டுமே அரியணையில் அமரப் பொருத்தமானவன். ஆக, மன்னனாக முடிசூட்டிக் கொண்டவனின் தலையெழுத்து, ஐந்தாண்டுகளுக்குப் பின் கட்டாய மரணம்.

இந்தக் கடுமையான சட்டத்துக்கு பயந்தே யாரும் அந்தப் பதவிக்கு ஆசைபடாமலிருந்ததால் அந்த அரியணை பெரும்பாலும் காலியாகவே இருந்தது.

இருப்பினும் ஒரு சிலர் எப்படியிருந்தாலும் சாகத்தானே போகிறோம்; மன்னனாகவே மடியலாமே!' என்று பதவி ஏற்பதுண்டு.

அதிலும் பாதி மன்னர்கள் இடையிலேயே மாரடைப்பால் மரணமடைவதுமுண்டு...

இப்படி ஒரு மன்னனுக்கு ஐந்து ஆண்டு ஆட்சிக்காலம் முடிந்தது. அன்று ஆற்றின் கரையைக் கடந்து காட்டிற்குச் செல்ல வேண்டும். அவனை வழியனுப்ப நாடே திரண்டிருந்தது.

மன்னன் வந்தான், அவனுடைய சிறப்பான ஆடைகளையும் நகைகளையும் அணிந்து, முடிசூடி, தங்க வாளேந்தி வைரங்கள் மின்ன மக்கள் முன் நின்றான்.

மக்கள் வாயைப் பிளந்தனர. "இன்னும் அரை மணிநேரத்தில் சாகப் போகிறான்; அதற்கு இவ்வளவு அலங்காரமா!"

தான் செல்லவிருந்த படகைப் பார்த்துவிட்டு சினத்துடன் கூறினான்.

"மன்னன் செல்லும் படகா இது!

பெரிய படகைக் கொண்டு வாருங்கள்!

நான் நின்று கொண்டா செல்வது! சிம்மாசனத்தைக் கொண்டு வாருங்கள்!"

கட்டளைகள் பறந்தன; காரியங்கள் நடந்தன!

சற்று நேரத்தில் அலங்கரிக்கப்பட்ட அழகான படகு ஆற்று நீரைத் கிழித்துக்

*கொண்டு மறுகரை நோக்கிப் பயணித்தது.*



*மக்கள் திகைத்து நிற்க, மன்னன் கையசைக்க பயணம் தொடர்ந்தது. மிகவும் அதிர்ச்சியடைந்தவன் படகோட்டியே!*

*காரணம், இதுவரை அவன் மறுகரைக்கு அழைத்துச் சென்ற எந்த மன்னனும் மகிழ்ச்சியாக சென்றதில்லை.*



*அழுது புலம்பி, புரண்டு, வெம்பிச் செல்வார்கள். இவனோ, மகிழ்ச்சிக் களிப்பில் பொங்கி வழிகிறான. படகோட்டி பொறுத்துக்கொள்ள முடியாமல் கேட்டான்.*

*''மன்னா! எங்கே செல்கிறீர்கள் தெரியுமா?''*

*"தெரியும் மறுகரைக்குச் செல்கிறேன்!"*

*"அங்கே சென்றவர்கள் திரும்ப இந்த நகரத்திற்கு வந்ததில்லை தெரியுமா?"*

*"தெரியும். நானும் திரும்ப இந்த நகரத்திற்கு வரப் போவதில்லை!"*

*"பின்னே எப்படி உங்களால் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது?"*

*"அதுவா!*

*நான் என்ன செய்தேன் தெரியுமா?*

*ஆட்சிக்கு வந்த 'ஓராண்டு' முடிவில் ஆயிரம் வேட்டைக்காரர்களைக் காட்டிற்கு அனுப்பினேன்; அவர்கள் கொடிய விலங்குகளை வேட்டையாடிக் கொன்று விட்டார்கள்!*

*'இரண்டாமாண்டு' முடிவில் ஆயிரம் விவசாயிகள் சென்றார்கள்; காட்டைத் திருத்தி உழுதார்கள்; இன்று ஏராளமான தானியங்கள் காய்கறிகள்.*

*'மூன்றாமாண்டு' முடிவில் ஆயிரம் கட்டடக்கலைவல்லுநர்கள்,தொழிலாளர்கள் சென்றனர். இன்று வீடு, வாசல், அரண்மனை, அந்தப்புரம், சாலைகள் எல்லாம் தயார்!*

*'நான்காம்' ஆண்டு முடிவில் ஆயிரம் அரசு அதிகாரிகள் சென்றனர். நிர்வாகம் சீரடைந்தது.*

*இந்த 1000 பேரும் தங்கள் மனைவி, குழந்தைகளுடன் சென்று அங்கே வாழ்கின்றனர். இப்போது நான் காட்டிற்குப் போகவில்லை; என்னுடைய நாட்டிற்குப் போகின்றேன்!*

*வாழப்போகின்றேன்! அதுவும் மன்னனாக ஆளப்போகிறேன்! உனக்கு ஒருவேளை அரண்மனைப் படகோட்டி வேலை வேண்டுமென்றால், இந்தப் படகோடு இப்படியே வேலைக்கு சேர்ந்து விடு!" என்றான் மன்னன். ஒரே ஒரு கேள்வியை மட்டும் எடுத்துக் கொள்ளலாம். மன்னனின் "வெற்றிக்குக் காரணங்கள் யாவை?"*

*பல காரணங் கள் இருந்தாலும் குறிப்பாக இரண்டினைக் கூறலாம். 'ஒன்று:' ஐந்து ஆண்டுகளுக்குப் பின் உயிர் வாழவேண்டும்; அதுவும் மன்னனாகவே வாழவேண்டும் என்று முடிவு எடுத்தது. 'இரண்டு:' அந்த முடிவினை அடைவதற்காக திட்டமிட்டு உழைத்தது!*

*அந்த மன்னனுடைய வெற்றிக்கு மட்டுமல்ல; நாம் அனைவருமே வெற்றி பெறவேண்டுமென்றால் நமக்குத்தேவை,*

*'ஒரு இலக்கை நிர்ணயித்தலும் அதற்காக திட்டமிடுதலும், திட்டமிட்ட பின் வெற்றி பெறும்வரை கடுமையாகவும் புத்திசாலித்தனமாக உழைப்பதுமே!'*

*'சிந்தனைத் திறனும் திட்டமிட்டு செயல் புரிதலும்'ஒருவரிடம் அமைந்தால் அவரால் எதையும் சாதிக்கமுடியும் !' நாம் நினைத்தால், முயற்சி செய்து உழைத்தால் சாதிக்க முடியும்!*

- ***விளையாட்டு உலகம் குருசாமி***




# லிபிட் ப்ரொஃபைல் என்றால் என்ன?

டாக்டரை பார்க்கும்போது அவர் ஒரு பிளட் டெஸ்ட் எடுத்துடுங்க என்று சொல்வார். அவர் லிபிட் ப்ரொபைல் என்று இரத்த பரிசோதனையாளருக்கு எழுதி அனுப்புவார். அது என்ன என்பதை தெரிந்து கொள்வோம்.

லிப்பிட் சுயவிவரம் (Lipid Profile) என்பது இரத்தத்தில் உள்ள கொழுப்புகள் மற்றும் கொழுப்பின் அளவை அளவிடும் ஒரு இரத்தப் பரிசோதனை ஆகும், இது இதய நோய் மற்றும் பக்கவாதம் வருவதற்கான அபாயத்தை மதிப்பிட உதவுகிறது; இதில் மொத்த கொழுப்பு, LDL (கெட்ட கொழுப்பு), HDL (நல்ல கொழுப்பு), மற்றும் ட்ரைகிளிசரைடுகள் போன்ற முக்கிய அளவுகள் பரிசோதிக்கப்படுகின்றன. இந்த சோதனை, இரத்த நாளங்களில் கொழுப்பு படிந்து அடைப்புகள் ஏற்படுவதைத் தடுக்கவும், இதய ஆரோக்கியத்தைப் புரிந்துகொள்ளவும் உதவுகிறது.

மொத்த கொழுப்பு (Total Cholesterol): உங்கள் இரத்தத்தில் உள்ள அனைத்து கொழுப்புகளின் மொத்த அளவு.

LDL (Low-Density Lipoprotein): "கெட்ட" கொழுப்பு; இது இரத்த நாளங்களின் சுவர்களில் படிந்து அடைப்பை (plaque) உருவாக்கலாம்.

"நல்ல" கொழுப்பு; இது அதிகப்படியான கொழுப்பை கல்லீரலுக்குத் திருப்பி அனுப்பி, இதய நோய்களின் அபாயத்தைக் குறைக்கிறது.

ட்ரைகிளிசரைடுகள்: நீங்கள் உண்ணும் உணவில் இருந்து வரும் கொழுப்பு; அதிக அளவு ட்ரைகிளிசரைடுகள் தமனிகளில் அடைப்பை உருவாக்கலாம்.

இந்த சோதனை ஏன் செய்யப்படுகிறது?

இதய நோய், மாரடைப்பு, மற்றும் பக்கவாதம் வருவதற்கான உங்கள் ஆபத்தை மதிப்பிடுவதற்கு. கொழுப்பைக் குறைக்கும் மருந்துகள் எவ்வளவு சிறப்பாக வேலை செய்கின்றன என்பதைப் பார்க்க.

உடல் ஆரோக்கியம் குறித்த விரைவான மதிப்பீட்டிற்கு, பொதுவாக முழு உடல் பரிசோதனையின் ஒரு பகுதி என்பதை சுருக்கமாக தெரிந்து கொள்ளலாம்!

# 2025ல் வெளியான வெற்றிகரமான சிறிய பட்ஜெட் திரைப்படங்கள்!

டூரிஸ்ட் ஃபேமிலி. இப்படம் அறிமுக இயக்குனர் அபிஷன் ஜீவிந்த் இயக்கத்தில் எம். சசிகுமார், சிம்ரன், மிதுன் ஜெய் சங்கர் நடித்த பேமிலி படத்தின் பட்ஜெட் 7 கோடி தான். ஆனால் இந்த படம் உலக அளவில் 87.23 கோடி வசூலையும் இந்தியாவில் மட்டும் 61.62 கோடி வசூலையும் பெற்றிருக்கிறது.

மிகவும் குறைந்த பட்ஜெட்டில் உருவான குடும்ப கதையாகும் இந்த படம் வியாபார ரீதியில் பெரிய வெற்றி பெற்று தமிழ் இயக்குனர் அவர்களுக்கு முன்மாதிரியாக அமைந்திருக்கிறது.





இயக்குனர் பாண்டிராஜ் இயக்கத்தில் விஜய் சேதுபதி, நித்யா மேனன் நடிப்பில் உருவான தலைவா தலைவி படத்தின் பட்ஜெட் 25 கோடி. இந்த படம் உலக அளவில் வசூல் 100+ கோடியும், இந்திய அளவில் 85 கோடியும் வசூல் பெற்றிருக்கிறதாம். குறைந்த பட்ஜெட்டிலேயே ரசிகர்களின் வரவேற்பு பெற்ற ஆன படம்.

கீர்த்திஸ்வரன் இயக்கத்தில் உருவான டியூட் படத்தில் பிரதீப் ரங்கநாதன், மமிதா பைஜு, சரத்குமார் உட்பட பலர் நடிப்பில் கடந்த தீபாவளிக்கு வெளியானது. 35 கோடி பட்ஜெட்டில் உருவான இந்த படம் உலக அளவில்114.3 கோடி வசூல் செய்திருக்கிறதாம். இந்தியாவில் மட்டும் 73.13 கோடி வசூல் செய்திருக்கிறது. ரொமான்ஸ் கொண்டாட்ட காமெடி கலந்த வணிக வெற்றி படம்.



டிராகன் (Tamil) அஷ்வத் மாரிமுத்து இயக்கத்தில் உருவான டிராகன் படத்தில் பிரதீப் ரங்கநாதன், அனுபமா பரமேஸ்வரன். 36 கோடி பட்ஜெட்டில் உருவான இந்த படம் உலக அளவில் 151.83 கோடியும், இந்திய அளவில் 102.55 கோடியும் வசூல் செய்திருக்கிறதாம்.



**2025 ஆம் ஆண்டு தமிழ்த் திரையுலகிற்கு மறக்க முடியாத ஆண்டாக அமைந்துள்ளது. பெரிய நட்சத்திரங்களின் பிரம்மாண்டமான திரைப்படங்கள் ஒருபுறம் இருந்தாலும், சில படங்களின் வெற்றி, ஒரு தரமான கதைக்கு பட்ஜெட் ஒரு தடையே அல்ல என்பதை மீண்டும் நிரூபித்திருந்தது. நட்சத்திர அந்தஸ்து இல்லாமலும், மிகக் குறைந்த செலவில் எடுக்கப்பட்டு, திரையரங்குகளில் வசூலைக் குவித்து தயாரிப்பாளர்களுக்கு அதிகம் லாபம் தமிழ்ப் படங்களின் முழு விவரங்களை பார்ப்போம்.**

மாமன்: ரூபாய் 10 கோடி பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட இப்படம் சுமார் 50 கோடி வரை வசூல் செய்தது. கிராமப்புறப் பின்னணியில் உருவான இந்த எமோஷனல் டிராமா, தாய்மாமனுக்கும் மருமகனுக்குமான பாசப் பிணைப்பை மையமாகக் கொண்டிருந்தது. கிராமத்து மனிதர்களின் உணர்வுகளை எந்த மிகைப்படுத்துதலும் இல்லாமல் சொன்ன இப்படம், நகர்ப்புற ரசிகர்களையும், கிராமப்புற ரசிகர்களையும் ஒரே நேரத்தில் கவர்ந்தது. சிறிய பட்ஜெட்டில் தயாரிக்கப்பட்டு, திரையரங்குகளில் லாபத்தை அள்ளியதன் மூலம், உள்ளூர் மண் சார்ந்த கதைகளுக்கு எப்போதும் வரவேற்பு உண்டு என்பதை நிரூபித்தது.





விஷால் மற்றும் சந்தானம் நடிப்பில் வெளியான திரைப்படம் 'மதகஜராஜா'. இந்த படத்தை இயக்குனர் சுந்தர் சி இயக்கியுள்ளார். வரலட்சுமி சரத்குமார், அஞ்சலி, நிதின் சத்யா, சோனு சூட், மனோ பாலா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு விஜய் ஆண்டனி இசையமைத்துள்ளார். கடந்த 2013ம் ஆண்டு உருவான இப்படம் 12 ஆண்டுகளுக்கு மேல் கிடப்பில் கிடந்தது. இந்நிலையில், 'மதகஜராஜா' 12 ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு 2025ல். நடிகர்கள் விஷால், சந்தானம், மனோபாலா ஆகியோரின் நகைச்சுவைக் காட்சிகள் பெரிதாகக் கவனம் பெற்றதால் படம் ரசிகர்களைக் கவர்ந்தது.மேலும், விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றதும் குறிப்பிடத்தக்கது.




டாணாக்காரன்' திரைப்படத்தின் மூலம் காவல்துறை பயிற்சியில் நடக்கும் அநீதிகளைத் தோலுரித்துக் காட்டிய இயக்குநர் தமிழ், தற்போது கதாசிரியராக தனது முத்திரையை மீண்டும் ஆழமான பதித்திருக்கும் படம் ‘சிறை’. சிறுபான்மையினரின் போராட்டங்களையும், அதிகார வர்க்கத்தின் பாரபட்சமான போக்கையும் பேசியிருக்கும் இப்படம் எப்படி இருக்கிறது என்பதை பார்க்கலாம்.

கதை 2000களின் தொடக்கத்தில் நடக்கிறது. ஆயுதப்படையில் தலைமைக் காவலராக இருக்கும் கதிரவனிடம் (விக்ரம் பிரபு) ஒரு கொலை வழக்கில் விசாரணைக் கைதியாக இருக்கும் அப்துல் ரவூஃபை (அக்ஷய் குமார்) வேலூரில் இருந்து சிவகங்கை நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லும் எஸ்கார்ட் ட்யூட்டி வழங்கப்படுகிறது. அவருடன் மேலும் இரண்டு காவலர்களும் துணைக்கு செல்கின்றனர். செல்லும் வழியில் அப்துல் ரவூஃபின் பின்னணியும், அவர் சிறைக்கு சென்றதற்கான காரணமும் நமக்கு சொல்லப்படுகின்றன. ரவூஃபை கதிரவன் நீதிமன்றம் கொண்டு சென்றாரா, இடையில் என்ன நடந்தது ஆகியவற்றை விறுவிறுப்புடனும் நெகிழ்ச்சியாகவும் சொல்கிறது ‘சிறை.

இந்த வரிசையில் லெவன், சக்தி திருமகன், டிஎன்ஏ, எமகாதகி ஆகிய படங்கள் குறைந்த பட்ஜெட்டில் தயாரிக்கப்பட்டு வெற்றியை பெற்ற திரைப்படங்கள் ஆகும்







# 100 நாள் வேலை திட்டம் – நடந்ததும் நடக்கப் போவதும்!

கிராமப்புறங்களில் "கால்வாய் வேலை" "ஏரி வேலை"சாதாரண மக்களால் கூறப்பட்டு வரும் 100 நாள் வேலை உறுதித் திட்டத்தை பெயர் மாற்றம் செய்து மத்திய அரசு அறிவித்துள்ளது தொடர்பான விவாதங்கள் போய்க் கொண்டிருக்கின்றன. குறிப்பாக தமிழகத்தை ஆட்சி செய்யும் திமுக ஒன்றிய அரசின் திட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்தி இருக்கிறது.

இந்தத் திட்டம் முதலில் 2005ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் (NREGA) என்ற பெயரில் தொடங்கப்பட்டது. அதன் பின்னர், அப்போதைய அரசு அதன் பெயரை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் (MGNREGA) என மாற்றியது. தற்போது, நரேந்திர மோடி தலைமையிலான அரசு இதை மாற்றி பூஜ்யா பாபு கிராமின் ரோஜ்கார் யோஜனா என்று பெயர் மாற்றம் செய்ய முடிவு செய்துள்ளது. வேலை நாட்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை கிராமப்புறங்களில் உள்ள திறமையற்ற மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் என்றும், இதனால் அவர்களின் வருமானமும் உயரும் என்றும் கூறப்பட்டுள்ளது.

MGNREGA திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வேலைகள் பெரும்பாலும் உடல் உழைப்பு சார்ந்தவை. சாலை அமைத்தல், நீர் சேமிப்புப் பணிகள், குளம் வெட்டுதல், தோட்டக்கலை மற்றும் கிராமப்புற சமூக மேம்பாடு தொடர்பான பல்வேறு சிறிய மற்றும் பெரிய பணிகள் இதில் அடங்கும். இந்தத் திட்டத்தின் நன்மைகள் கிராமப்புறப் பொருளாதாரத்தை கணிசமாக வலுப்படுத்தியுள்ளன. இந்த மத்திய அரசுத் திட்டம், கிராமங்களில் வேலைவாய்ப்பை வழங்குவதன் மூலம் கிராமப்புற வருமானத்தை நிலைப்படுத்த உதவுகிறது. இத்திட்டத்தின் கீழ் பெண்களின் பங்களிப்பு அதிகமாக உள்ளது.

இந்நிலையில் தற்போது மத்திய அரசு செய்துள்ள இந்த மாற்றமும், வேலை நாட்களின் அதிகரிப்பும் கிராமப்புறத் தொழிலாளர்களுக்கு நேரடியாகப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உயர்த்தப்பட்ட ஊதியமும் அவர்களின் வருமானத்தை அதிகரிக்கும். கொரோனா பெருந்தொற்று காலத்தில் கிராமப்புற வேலைவாய்ப்பில் இத்திட்டம் முக்கியப் பங்கு வகித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# ராஜா தேசிங்கும் வழுதாவூர் கோட்டையும்!



விழுப்புரத்திலிருந்து முண்டியம்பாக்கம் திருக்கனூர் வழியாக சென்றால் 28வது கிலோமீட்டரில் அமைந்திருக்கிறது வழுதாவூர் கிராமம். இங்கு வயல்வெளிகளுக்கு நடுவில் அமைந்திருக்கிறது ஒரு சிதிலமடைந்த கட்டடம். உள்ளூர் மக்களால் பங்களா கோட்டை என அழைக்கப்படும் இந்தக் கட்டடம், ஒரு காலத்தில் பிரமாண்டமாக விரிந்து பரந்திருந்த வழுதாவூர் கோட்டையின் ஒரு சிறு பகுதி. இப்போது இந்தக் கட்டடமே, மரங்களும் புதர்களும் சூழ பாழடைந்து காணப்படுகிறது.

செஞ்சி நாயக்க அரசின் காலகட்டத்தில் வழுதாவூர் ஒரு சீர்மையாக பிரிக்கப்பட்டு செயல்பட்டது. வழுதாவூரில் ஒரு படைப் பிரிவும் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டது. இதன் காரணமாகவே வழுதாவூரில் ஒரு கோட்டை கட்டப்பட்டது" என்கிறார் வரலாற்று அறிஞர் ஜெயபால் ரத்தினம்.

நாயக்க அரசு வீழ்ச்சியடைந்து பீஜப்பூர் சுல்தானுக்குக்கீழ் இந்தப் பகுதிகள் வந்தபோது, வேலூர், செஞ்சி, வாலிகண்டபுரம் ஆகிய மூன்று இடங்களையும் தலைமையிடமாகக் கொண்டு நிர்வாகப் பகுதிகள் உருவாக்கப்பட்டன. அதில் செஞ்சி நிர்வாகப் பிரிவில் வழுதாவூர் இடம்பெற்றிருந்தது.

வாலிகண்டபுரம் ஆளுநராக செயல்பட்ட ஷேர் கான் லோடி என்பவர், தனது ஆளுமைக்கு உட்பட்டிருந்த புதுச்சேரி கிராமத்தை கிழக்கிந்திய பிரெஞ்சு வணிகக் குழுவினர் வணிகத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ள அனுமதி அளித்தார்.

அதேநேரம், டச்சு மற்றும் ஆங்கிலேய வணிகக் குழுவினர் செஞ்சி ஆளுநரை அணுகி தாங்கள் வணிக செயல்பாடுகளுக்காக வழுதாவூரில் தளம் அமைத்துக்கொள்ள அனுமதி கோரினர். ஆங்கிலேய குழுவினர் வழுதாவூரில் இருந்து செயல்பட செஞ்சியின் ஆளுநரான நாசிர் முகமதுகான் அனுமதி வழங்கினார்!

# இங்கேயும் இதயம் உள்ள மனிதர்கள்!

ஒரு மகளின் மேல் தந்தைக்குள்ள_பாசம் என்னங்க மூட்டை" "ஒண்ணுமில்ல. ரேசன் கடையில 2 ஆயிரம் ரூபா குடுத்தாங்க, அதான் கொஞ்சம் மளிகை சாமான் வாங்கிட்டு வந்தேன்". ஓடிவந்து மூட்டையைக் பிரிக்கும் மனைவியை அதட்டினார். ஏய் அத எடுக்காத இது நமக்கு இல்ல. இது நம்ம பொண்ணு வீட்டுக்கு. ஏன் நமக்கு வாயும் வயிறும் இல்லையா. உங்க பொண்ணுக்கு மட்டும் தான் வாயும் வயிறும் இருக்குதா. 2ஆயிரம் ரூபா வாங்கிட்டு வந்துருக்கீங்க. மீதிய குடுங்க.

இதுவே 2400 ரூபாய் ஆச்சு, 400 ரூபாய் கடன் சொல்லிட்டு வந்திருக்கேன். அப்போ எனக்கு ஆஸ்துமா மாத்திரை வாங்கலே. அந்த உறிஞ்சிர மிசினு இன்னும் வாங்கல அதானே வாங்கிக்கலாம். எப்படியும் காசு வரும்போது உனக்கு வாங்கி தரேன். உனக்கு வாங்கித் தராம வேற யாருக்கு வாங்கி தர போறேன். ஐயே வாங்கி கொடுத்தாலும், நான் ஆறு மாசமா கேட்டுட்டு இருக்கேன். மூச்சு விட முடியல. கஷ்டமா இருக்குன்னு சொல்லிட்டு இருக்கேன். அதை வாங்கி கொடுக்க முடியல. 2000 ரூவா வாங்கி அப்படியே மகளுக்கு மளிகை சாமான் வாங்கிட்டு வந்துட்டீங்க.

சரி, எப்படி போவீங்க பஸ் இல்ல. ட்ரெயின் இல்ல. ஆட்டோவும் கிடையாது.எப்படி போவீங்க.

சைக்கிள்ல போவேன். ஏன் பாதிலேயே வெய்யில்ல சுருண்டு விழுந்து சாகுறதுக்கா.

நல்ல வார்த்தையே பேச மாட்டியா நீ. இப்ப போக வேணாம் நாளைக்கு காலைல போய் குடுத்துக்கலாம்.

இல்லல்ல நான் இப்பவே கிளம்புறேன். போங்க. போலீஸ்காரன் சாமானையும் சைக்கிளையும் புடுங்கி வச்சுகிட்டு, உங்களை தோப்புக்கரணம் போட சொல்லுவானோ, குட்டிக்கரணம் போட சொல்லுவானோ. நடந்து தான் வரப் போறீங்க. நல்ல வார்த்தையே பேச மாட்டியா. ஐயையோ துரை போருக்கு போறாரு. நல்ல வார்த்தை சொல்லி அனுப்பனும். சரி கிளம்பனும் பழைய சோறு இருந்தா கொடு.

அதான் மக வீட்டுக்கு போறீங்கள்ள. உங்க மக சமைச்சு வச்சிருப்பா. அங்கே போய் சாப்பிட்டு வாங்க. சரி நான் கிளம்புறேன்!

சொன்னா கேக்க மாட்டீங்க. பட்டா தான் உங்களுக்கு புத்தி வரும்.போலீஸ்காரன் உங்கள அடிச்சு உதைச்சு அனுப்பும்போது தான் நான் சொன்னது ஞாபகத்துக்கு வரும்.

அவர் சைக்கிளில் எல்லா மளிகை சாமான்களையும் மூட்டையாக கட்டி, பின்பக்கம் வைத்துக் கொண்டு கிளம்பினார்.

ஒரு பத்து கிலோமீட்டர் வந்திருப்பார்.அங்கே திருவந்திபுரம் கெடிலம் ஆற்று பாலத்தை தாண்டிய சாலையில் தடுப்பு அமைத்து போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். மனைவி சொன்னது போல் போலீஸ்காரர்கள் சாமானையும் சைக்கிளையும் பிடிங்கி கொள்வார்களோ. தோப்புக்கரணம் போடச் சொல்லி போட்டோ எடுத்து டிவியில் போடுவார்களோ. தெரியாமல் வந்து விட்டோமோ.என்று பயம் தொற்றிக் கொண்டது. அவர் அருகில் சென்றபோது ஒரு போலீஸ்காரர் தடுத்து நிறுத்தினார். என்னா பெருசு எங்க கிளம்பிட்டே. ஐயா மஞ் சகுப்பம் வரை போறேங்கய்யா. மக வீட்டுக்கு மளிகை சாமான்



வாங்கிட்டு போறேங்கய்யா. சைக்கிளை ஓரமாக நிறுத்து. அந்த மூட்டைய தூக்கிட்டு வா.

அவ்வளவுதான் 2,400 ரூபாய் மளிகை சாமான் போக போவுது. மிதிவண்டியை நிறுத்தி ஸ்டாண்ட் போட்டு, மளிகை சாமான் மூட்டையை இறக்கி கீழே வைத்தார்.

யோவ் பெருசு அந்த ஜீப்புக்குள்ள இன்ஸ்பெக்டர் உக்காந்திருக்காரு அவரை போய் பாரு!

அவர் போலீஸ் வண்டியை நோக்கி நடந்தார். வண்டியில் வாட்டசாட்டமாய் கூலிங் கிளாஸ் போட்ட பெரிய மீசை வைத்திருந்த அந்த இன்ஸ்பெக்டர் அமர்ந்திருந்தார்! என்ன பெரியவரே எங்க கிளம்பிட்டீங்க

ஐயா மஞ்சகுப்பம் வரை போறேங்கய்யா. பொண்ணு அங்க இருக்கு. மாப்பிள்ளை டிரைவரா இருக்காரு. வேலை இல்ல. அதான் கவர்மெண்ட் கொடுத்த 2 ஆயிரம் ரூபாயில கொஞ்சம் மளிகை சாமான் வாங்கிட்டு போறேங்கய்யா

ஊர்ல தடை போட்டுருக்காங்க தெரியாதா பெரியவரே. தெரியுங்கய்யா. ஆனா நாலு உசுரு அங்க சோத்துக்கு இல்லாம கஷ்டப்படுமே. அதனாலதான் இத போயி கொடுத்துட்டு வந்துடலாம்னு கௌம்பினேய்யா.

என்ன வயசு ஆகுது பெரியவரே உங்களுக்கு 63 வயசு ஆகுதுங்கய்யா அருகில், நடு சாலையில் பத்துப் பதினைந்து இளைஞர்கள் தோப்புக்கரணம் போட்டுக் கொண்டிருந்தார்கள். இவருக்கு மனசு பிசைந்தது. நடுக்கம் வந்தது.

கான்ஸ்டபிள் வந்தார். சார் இந்த ஆள் கொண்டு வந்த மூட்டைய சீஸ் பண்ணிட்டேன் சார் உன் வயசென்னை அவரு வயசு என்ன ஆளுன்ற சாரி சார். அந்த கான்ஸ்டபிள் தள்ளி போய் நின்று கொண்டார். பெரியவரே சாப்பிட்டீங்களா?

இல்லீங்க சார். கான்ஸ்டபிள் அந்த சாப்பாடு பொட்டலத்துல

ஒண்ணு எடுத்து குடு. ஐயா எனக்கு வேண்டாய்யா. நான் மகள் வீட்டுல போய் சாப்பிடுகிறேன். சாலையில் தோப்புக்கரணம் போட்டுக் கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவன் ஏதோ சொல்ல, சட்டமா பேசறே என்று ஒரு கான்ஸ்டபிள் அவனை முதுகில் அடித்தார்.

அங்க போய் கறியும் சோறும் தின்னுங்க. இது சும்மா பிரிஞ்ஜி தான். சாப்பிட்டுக்கங்க. வெயில்ல எப்படி சைக்கிள் மிதிப்பீங்க. சாப்பிட்ட பின் தோப்புக்கரணம் போட சொல்வார்களோ. ஜீப் மைக் கர கரவென்று பேசிக்கொண்டே இருந்தது. நாளைக்கு காலையில் சீக்கிரமா கிளம்பி போயிருக்கலாம் என்று நினைத்துக்கொண்டார். கான்ஸ்டபிள் எடுத்து வந்து கொடுத்த ஒரு பொட்டலத்தையும் ஒரு தண்ணீர் பாட்டிலையும் வாங்கிக்கொண்டார்.

பெரியவரே அதோ அந்த மரத்தடி இருக்குல்ல. இல்லன்னா அந்த கடைவாசல் இருக்குல்ல அங்க உக்காந்து சாப்பிடுங்க. இன்ஸ்பெக்டர் சொன்ன இடத்தில் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தார். பெரியவரே நல்லா சாப்பிடுங்க இன்னொரு பொட்டலம் வேணுமா

இன்ஸ்பெக்டர் கேட்க, அவர் வேண்டாம் என்று தலையாட்டினார். சாப்பிட்டு தண்ணீர் குடித்து கை கழுவினார். பரவாயில்லை வயிறு ரொம்பிடுச்சி. இப்ப முட்டி போடலாம். தோப்புக்கரணம் போடலாம்.

பெரியவரே சாப்பிட்டீங்களா? சாப்பிடங்கய்யா ஜீப்ல கொண்டு வந்து உங்க மகள் வீட்டுல விடட்டுமா! ஐயா வேண்டாங்கய்யா நான் போயிடுவேங்கய்யா

சரி இந்த பனியனை போட்டுக்கோங்க. இந்த தொப்பிய போட்டுக்கோங்க. இது வாலண்டியர்ஸ் போட்டுக்கறது. அரசாங்கம் கொடுக்கிற பணத்தை வாங்கினமா தண்ணி அடிச்சமா தலைகுப்புற விழுந்தமான்னு இல்லாம, நாலு உசுருக்கு சோறு போட சாமான் வாங்கிட்டு போறீங்களே. நீங்க தான் உண்மையான வாலண்டியர். இந்த பனியனை போட்டுக்கோங்க. பத்திரமா போயிட்டு வாங்க.

அது கனவா நனவா என்று நம்ப முடியாமல் பனியனை வாங்கி மாட்டிக்கொண்டார்.

இன்ஸ்பெக்டருக்கு இரண்டு கை குவித்து வணக்கம் வைத்தார். சைக்கிளில் ஏறி, மகள் வீட்டை நோக்கி சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தார்.

அப்பா எப்படி வந்தீங்க.? எதுக்குப்பா சைக்கிள்ல வந்தீங்க. கை கழுவுங்க. பேரன்கள் ஓடி வந்து கட்டிக் கொண்டார்கள்.

பேரன்களை அணைத்து உடனே தள்ளிப் போகச் சொன்னார். மகள், அவர் வாங்கி வந்த பொருட்களை எடுத்து உள்ளே வைத்துவிட்டு, என்னப்பா தனியா வந்துருக்கீங்க அம்மாவை கூட்டிட்டு வந்து இருக்கலாம்ல.

இல்லம்மா. இன்னொரு நாளைக்கு கூட்டிட்டு வரேன். நான் கிளம்பட்டுமா. இங்க இருக்கிறது அவ்வளவு நல்லது இல்லம்மா. நான் வீட்டுக்கு போயிடுறேன். உங்க அம்மா தனியா இருக்கும்.

அப்பா சாப்பிட்டு போங்கப்பா. சாப்பாடு ரெடியா இருக்குப்பா. நான் சாப்பிட்டேன்மா.

ஏதுப்பா இந்த பனியன் நீங்க வாலண்டியரா இருக்கீங்களா? நடந்த எல்லா விஷயங்களையும் மகளிடம் சொன்னார்.



பேரன்களை அழைத்து அவர்களுக்கு காசு கொடுத்து விட்டு கிளம்பினார். மகள் ஒரு பையோடு வந்தாள்.

அப்பா பையில கொஞ்சம் பழங்கள் இருக்கு. எடுத்துட்டு போயி அம்மாகிட்ட கொடுங்கப்பா. அம்மாவுக்கு ரோட்ஹெலர் மெஷின் வாங்கினேன். அத கொடுத்துடுங்கப்பா. அம்மாவுக்கு ஆஸ்துமா மாத்திரை வாங்கி இருக்கேன் அதையும் மறக்காம குடுத்துடுங்கப்பா. பையை வாங்கிக்கொண்டார்.

மாப்பிள்ளை எங்கம்மா?

அப்பா அரசாங்கத்துல காய்கறி எல்லாம் வண்டியில் போய் விக்க சொல்லியிருக்காங்க. அதான் ஒரு காய்கறி வண்டியில டிரைவரா போயிருக்காருப்பா.

இந்த ஆஸ்துமா மெஷினுக்கும்,' ஆஸ்துமா மாத்திரைக்கும் ஏதும்மா காசு? போன மாசம் சம்பளத்திலேயே இது இரண்டும் வாங்கி வச்சுட்டேன் பா. அவர் சைக்கிளை எடுக்க வீட்டை விட்டு வெளியே வந்தபோது மகள் ஓடிவந்து அவர் சட்டைப்பையில் நான்கு ஐநூறு ரூபாய் நோட்டுகளை வைத்தார்

அப்பா எங்களுக்கும் நேத்துதான் அரசாங்கத்திலிருந்து 2 ஆயிரம் ரூபாய் கொடுத்தாங்க. நேத்து நைட்டு உங்க மாப்பிள்ளை சொல்லிட்டாரு, உங்க அப்பா அம்மாக்கு கொடுத்துடு. நம்ம ஏதாவது வேலை செஞ்சி சம்பாரிச்சுக்கலாம். வயசானவங்க என்ன பண்ணுவாங்கன்னு சொன்னாருப்பா.


சரிம்மா. மாப்பிள்ளைய கேட்டேன்னு சொல்லு. பத்திரமா இருங்கம்மா. அவர் உயிரை தன் மகள் வீட்டில் வைத்து விட்டு மிதிவண்டியில் ஏறி தன் வீட்டை நோக்கி மிதிவண்டியை இயக்க ஆரம்பித்தார்... தன்னுடைய தேவைகளை விட தன் மகளின் தேவைகளே பெரிது என நினைக்கும் தந்தை, அது போலவே தன்னுடைய தேவைகளை விட தனது பெற்றோர்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மகள்.

வயதான ஏழை முதியவரின் மனநிலையை, சூழ்நிலையை உணர்ந்து நடக்கும் கண்ணியமிக்க காவலர்.

பி .குருசாமி ராயபுரம்

# சென்னையில் அன்று!







ஐந்து கிலோமீட்ட போய்வர மாதம் 6 ரூபாய். டிராம் ஓடிய சென்னை...

டவுன் பஸ்மாதிரி இந்த டிராமை டவுன் ரயில் என்றும் சொல்லலாம். சாலையில் ரயில் தண்டவாளங்கள் போல அமைக்கப்பட்ட இரட்டை ரெயில்களின் மேல் மணிக்கு 7 கிலோமீட்டர், ஆமாம், மணிக்கு ஏழே கிலோமீட்டர் வேகத்தில் ஓடியது அந்தக்கால டிராம்.

டிராம்களில் இரண்டு ரகம் உண்டு. ஒன்று 50 அடி நீளம் கொண்டது , மற்றொன்று கொஞ்சம் சிறியது 35 அடி நீளமுள்ளது. இப்போதைய பஸ்ஸின் சற்றே பெரியவடிவம். இன்றைய மின்சார ரயில்களைப் போல தலைக்கு மேலே இருக்கும் வயர்களில் இருந்து மின்சாரத்தை எடுத்துக்கொண்டு இயங்கியது. வேகம் மட்டும் மணிக்கு 7 கிமீதான். டிராமின் உள்ளே இரண்டு பக்கமும் நீண்ட மர பெஞ்சுகள் அமைத்து இருப்பார்கள், அதில் 60 பேர் உட்காரலாம். இரண்டு பெஞ்சுகளுக்கும் இடையே உள்ள இடை வெளியில் மேலே உள்ள கம்பிகளை பிடித்தபடி மற்றவர்கள் நிற்கலாம். ஒரு டிராமில் 200 பேர்வரை பயணித்து இருக்கிறார்கள்.

1895 மே 7ம் தேதி சென்னையில் எலக்ட்ரிக் ட்ராம் சர்வீஸ் துவக்கப்பட்டபோது அதுதான் நாட்டின் முதல் டிராம்.லண்டனிலேயே அப்போது டிராம்களை குதிரைகள்தான் இழுத்தன. ஹெட்சிஸ்ட்சன் அண்டு கம்பெனி என்கிற நிறுவனம் ஒருலட்சம் பவுண்ட் முதலீட்டில் டிராம் சர்வீசைத்



ஏதுவாக்கியது.

சென்னையில் மொத்தம் 5 டிராம் பாதைகள் அமைக்கப்பட்டன.

ராயபுரத்தில் புறப்பட்டு கஸ்டம்ஸ் ஹவுஸ், பாரிஸ் கார்னர், பச்சையப்பா உயர்நிலைப் பள்ளி, செண்ட்டிரல், எழும்பூர், ஹாரிஸ் பிரிட்ஜ், சிந்தாதிரிப்பேட்டை வழியாக மவுண்ட் ரோடு ரவுண்டான ( இன்றைய அண்ணா சாலை வாலாஜா சாலை சந்திப்பில் அண்ணா சிலை இருக்கும் இடம்) போய் சேரவது முதல் வழித்தடம். அடுத்தது சென்டிரலில் துவங்கி வால்டாக்ஸ் ரோடு, சால்ட் குவார்ட்ஸ், கெல்லீஸ் வழியே புரசைவாக்கம் வரை ஓடியது . மூன்றாவது வழித்தடம் மவுண்ட் ரோடு ரவுண்டானாவில் ஆரம்பித்து ஐஸ்ஹவுஸ் வழியாக சிட்டிசெண்டர் மாலுக்குப் பின்னால் இருக்கும் அம்பேத்கர் பாலம் வரை. நான்காவது வழித்தடம் அதே மவுண்ட் ரோடு ரவுண்டானாவிலிருந்து ஜி.பி ரோடு, ராயப்பேட்டை அரசு மருத்துவமனை, ராயப்பேட்டை காவல் நிலையம், லஸ் சர்ச் சாலை வழியாக மைலாப்பூர் வரை சென்றது. ஐந்தாவது பாதை வண்ணாரப்பேட்டை டெர்மினசில் இருந்து கிளம்பி ராயபுரம் அரசு மருத்துவ மனை, சூளை போஸ்ட் ஆஃபீஸ், எலிபெண்ட் கேட் காவல் நிலையம் வரை ஓடியது.

கட்டணம் அரையணா, ஓரணா என்றுதான் நிர்னயித்து இருந்திருக்கிறார்கள். திருவல்லிக்கேணி, மைலாப்பூர் வக்கீல்கள் ஹைகோர்ட்டுக்கு டிராமில்தான் வந்திருக்கிறார்கள். இன்றைய சிட்டி செண்டருக்குப் பின்னால் ஹாமில்டன் பிரிட்ஜ் என்றொரு பாலம் இருந்திருக்கிறது. தமிழ் மக்கள் வாயில் ஹானில்டன் , அம்பட்டன் ஆகிவிட அது டிராம் டிக்கெட்டில் அது பார்பர்ஸ் பிரிட்ஜ் என்று பதிவாகி இருக்கிறது. அந்த பார்பர்ஸ் பிரிட்ஜில் இருந்து ராயபுரம் போய் வருவதற்கான சீசன் டிக்கெட் மாதத்திற்கு 6 ரூபாய் எட்டணா..

சீரும் சிறப்புமாக 50 ஆண்டு காலம் சென்னை மக்களின் வாழ்க்கையில் இடம் பெற்று இருந்த டிராம் 1953ல் முடிவுக்கு வந்தது. பேருந்துகள் பிரபலமானதாலும் , டராமின் மந்தமான ஓட்டம் மக்களின் தினசரி ஓட்டத்துக்கு போதுமானதாக இல்லாததால் ராஜாஜி முதல்வராக இருந்த காலத்தில் டிராம் கம்பெனி திவாலானது.

அதுவரை டிராமுக்கு மின்சாரம் கொடுத்துவந்த எம்.ஈ.எஸ் என்கிற மெட்ராஸ் எலெக்டிரிக்கல் சிஸ்டம் என்கிற நிறுவனமும் கலைக்கப்பட்டது. டிராம்கள் ஓடிய இருப்புப் பாதைகள் பெயர்த்து எடுக்கப்படவில்லை. அவை இப்போதும் அந்த வழித்தடங்களில் தார் சாலைகளின் உள்ளே புதைந்து கிடக்கின்றன.

# பெண் குழந்தைகளே வேண்டும்! உலக மக்களின் எதிர்பார்ப்பு!



உலகெங்கும் "ஆண் குழந்தைகளே வேண்டும்" என்ற எண்ணம் மாறி, "ஆண் குழந்தைகள் வேண்டாம், பெண் குழந்தைகளே வேண்டும்" என்ற மனப்போக்கு வளர்ந்து வருவதாக 'தி எகனாமிஸ்ட்' (The Economist) இதழ் கூறுகிறது...

மனித இன வரலாற்றில் முதன்முறையாக இந்தச் சமன்பாடு தலைகீழாக மாறியுள்ளது. பல நாடுகளில் இப்போது ஆண் குழந்தைகளே சுமையாகவும், பெண் குழந்தைகளே வரமாகவும் பார்க்கப்படுவதைப் பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில் இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

இந்தத் தலைகீழ் மாற்றம் குறிப்பாக மூன்று முக்கியப் பகுதிகளில் மிகத் தெளிவாகத் தெரிகிறது என்கிறது 'தி எகனாமிஸ்ட்':

அமெரிக்கா போன்ற நாடுகளில் தத்தெடுக்கப்படும் குழந்தைகளில் 80% பேர் பெண் குழந்தைகளாகவே இருக்கிறார்கள். ஜப்பானில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், "ஒரே ஒரு குழந்தை போதும்" என்று நினைக்கும் தம்பதிகளில் 75% பேர், அது பெண் குழந்தையாக இருக்க வேண்டும் என்றே விரும்புகின்றனர்.

உலகின் மிகப்பெரும் மக்கள் தொகை கொண்ட இவ்விரு நாடுகளிலும் இந்த மாற்றம் தலைகீழாக நிகழ்ந்துள்ளது. சீனாவில் 2004 ஆம் ஆண்டில் 100 பெண் குழந்தைகளுக்கு 121 ஆண் குழந்தைகள் என்ற உச்சத்தில் இருந்த பாலின விகிதம், சமீபத்தில் சுமார் 109.8 ஆகக் குறைந்துள்ளது.

இதேபோல் இந்தியாவிலும் இந்த விகிதம் முன்னேற்றமடைந்து, தற்போது 100 பெண் குழந்தைகளுக்குச் சுமார் 106.8 ஆண் குழந்தைகள் என்ற அளவில் உள்ளது.

வியட்நாம், வங்கதேசம் மற்றும் ஜார்ஜியா போன்ற நாடுகளிலும் ஆண் குழந்தைகளுக்கான மோகம் குறைந்து வருகிறது. பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் முன்னேற்றத்தில் பெற்றோர்கள் அதிக அக்கறை காட்டத் தொடங்கியுள்ளதாக 'தி எகனாமிஸ்ட்' குறிப்பிடுகிறது.

ஒரு மகன் திருமணமாகிச் சென்றபின் தன் பெற்றோரைக் கவனிப்பதை விட, ஒரு மகள் தன் வாழ்நாள் முழுவதும் பெற்றோரின் உடல்நலம் மற்றும் உணர்ச்சிப்பூர்வமான தேவைகளில் அதிக அக்கறை காட்டுகிறார் என்ற எண்ணம் உலகளாவிய ரீதியில் அதிகரித்துள்ளது. "மருமகள் வந்தபின் மகன், மருமகளின் கணவனாக மாறிவிடுகிறான். ஆனால், மகள் சாகும் வரை நம் மகளாகவே இருக்கிறாள்" என்பதே பெற்றோரின் கருத்தாக இருக்கிறது.

தவிர, இன்று உலகெங்கிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் ஆண்களை விடப் பெண்களே அதிக அளவில் பட்டம் பெறுகிறார்கள். இதனால் குடும்பத்தின் பொருளாதாரச் சுமையைத் தாங்கும் திறன் பெண்களிடம் அதிகம் இருப்பதாகப் பெற்றோர்கள் நம்புகிறார்கள்.

இன்றைய கார்ப்பரேட் உலகில் உடல் உழைப்பை விட மென்திறன்கள் (Soft Skills),



பொறுமை மற்றும் தகவல் தொடர்புத் திறன்களுக்கே (communication) அதிக மதிப்பு கிடைக்கிறது. இந்தப் பண்புகளில் பெண்கள் இயல்பாகவே சிறந்து விளங்குவதால், அவர்கள் சிறந்த வருமானம் ஈட்டுபவர்களாக மாறுகிறார்கள். ஒரு காலத்தில் "குலத்தைக் காப்பவன்" என்று போற்றப்பட்ட ஆண் குழந்தைகள், இன்று பல நாடுகளில் ஒரு பிரச்சினையாகவே பார்க்கப்படுகிறார்கள் என்கிறது 'தி எகனாமிஸ்ட்'. இதற்குச் சில முக்கியக் காரணங்கள்:

* ஆண் குழந்தைகள் கல்வியில் பின்தங்குவது (The Male Crisis in Education).

* போதைப் பழக்கம் மற்றும் குற்றச் செயல்களில் சிக்கும் அபாயம் ஆண்களுக்கு அதிகம் இருப்பது.

* வேலையில்லாத் திண்டாட்டத்தால் நீண்ட காலம் பெற்றோரைச் சார்ந்து இருப்பது.

ஆக, பெண்களுக்கு எதிரான பாகுபாடு (Discrimination) மறைந்து வருவது மகிழ்ச்சி அளித்தாலும், "எந்தக் குழந்தையாக இருந்தால் என்ன? அக்குழந்தையைச் சிறந்த முறையில் வளர்ப்போம்" என்ற எண்ணம் வரும்போதுதான் மக்கள் மனதில் உண்மையான மாற்றம் ஏற்பட்டதாகக் கருத முடியும்.

**அனுப்பியவர் ராயபுரம் பி.ஜி.சாமி**


# மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

| |
|---|
| **ஆயுள்சந்தா : ரூ.2400.00** |
| **ஆறாண்டு சந்தா : ரூ.1440.00** |
| **ஆண்டு சந்தா : ரூ.240.00** |

மேலும் விபரங்களுக்கு: **044-23743007/8**

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

| | | |
|---|---|---|
| Name | : | MITRA TIMES |
| A/C no | : | 50200012576292 |
| Bank | : | HDFC Bank |
| Branch | : | T.Nagar |
| IFSC | : | HDFC0000206 |



# முதுகு வலிக்கு தீர்வு!

**நா**ம் உண்ணும் உணவுப் பொருளில் ஏற்படும் செரிமான கோளாறினால் வயிற்றுப் பகுதி முதுகுப் பகுதி ஆகியவற்றில் வலி ஏற்பட்டு இப்படியும் அப்படியும் அசைக்க முடியாமல் இருக்கும். வயதான காலத்திலும் இப்படி இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதற்காக உடனடியாக ஆம்புலன்சை கூப்பிடுவதோ டாக்டரைப் பார்ப்பதோ சரியாக இருக்காது. அந்தக் காலத்தில் பெரியவர்கள் இப்படிப்பட்ட வழிக்கு இயற்கையாகவே சில வழிகளை சொல்லி இருக்கிறார்கள்.

அவற்றை முதலில் கொஞ்சம் முயற்சி செய்து அப்படியும் சரியாக விட்டால் அப்படியும் சரியாக விட்டால் மருத்துவர் அணுகுவது நல்லது மருத்துவரை அணுகுவது நல்லது.குறிப்பாக முதுகு வலிக்கு செய்ய வேண்டிய வீட்டு வைத்தியம்.

மஞ்சள், இஞ்சி, பூண்டு சேர்த்த உணவுகள், வெந்நீர் ஒத்தடம்/குளிர் ஒத்தடம் தரலாம்.

நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயில் சிறிது மஞ்சள், இஞ்சி அல்லது பூண்டு சேர்த்து காய்ச்சி, வலியுள்ள இடத்தில் தேய்த்து மசாஜ் செய்தால் தசை இறுக்கம் குறைந்து வலி குறையும்.

மஞ்சள் கலந்த பாலை குடிக்கலாம்.

இஞ்சி போட்டு கொதிக்க வைத்து தேநீர் அருந்தலாம். உணவு வகைகளில் இஞ்சி சேர்த்துக் கொள்ளலாம்.

மெதுவான நடைபயிற்சி, நீட்சிப் பயிற்சிகள் (stretching exercises) தசைகளை வலுப்படுத்தும்.



**வ**ணக்கம். இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகள் என்று இரண்டு கையையும் சேர்த்து தலைக்கு மேலே தூக்கி வைத்துக் கொண்டு சொல்லிக் கொண்டே உள்ளே வந்தார் கபாலிகான்.

நாம் நீட்டிய மூலிகை மருத்துவ டீயை சுவைத்துக் கொண்டே என்ன இது புது மாற்றம் என்று கேட்டோம். ஆறு மாதத்திற்கு இப்படித்தான் யாரைப் பார்த்தாலும் கையை தூக்கி கும்பிட போகிறார்கள் அரசியல்வாதிகள்.

**எப்ப தேர்தல்?**

அது எப்ப வேண்டுமானாலும் நடக்கலாம். எல்லாம் மேல இருக்கிறவங்களுக்கு தான் தெரியும் என்று மேலே கையை காட்டினார்.

**யார் ஆண்டவனை சொல்கிறீர்களா?**

இல்லை மத்தியில் ஆண்டு கொண்டு இருக்கும் ஆட்சியை சொல்லுகிறேன்! என்று டைமிங்காக சொன்னார்.

**"இது சட்டமன்றத் தேர்தல் தானே?"**

ஆமாம்.பா.ஜ.க. நினைத்த மாதிரி தமிழகத்தில் நடத்திக் காட்ட வேண்டும் என்கிற தீவிரத்தில் களமாடிக் கொண்டிருக்கிறது.

**வாய்ப்பு இருக்கிறதா?**

இருக்கு ஆனா இல்ல?

**என்ன இப்படி ஆரம்பிச்சிட்டீங்க?**

ஆமா அப்படித்தான் போய்கிட்டு இருக்கு?


**நாம் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தவுடன்...**

என்ன அமைதி ஆயிட்டீங்க மக்கள் மாதிரி?

மக்களுக்கு எல்லாம் புரியுங்க நமக்கு தான் புரியல!

**கொஞ்சம் புரியற மாதிரி சொல்லுங்களேன். என்று கெஞ்சாத குறையாக கேட்டோம்.**

அதாவது ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு கணக்கை போட்டுக் கொண்டிருக்கிறார்கள் பொதுமக்கள் அந்த கணக்கை ரசித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொன்றாக சொல்கிறேன்.




**"சொல்லுங்க" என்றோம்.**

திமுக தன்னுடைய சாதனைகளை நம்பியும் தன்னுடைய கட்சிக்காரர்களின் உழைப்பையும் நம்பி களமிறங்கி கொண்டிருக்கிறது குறிப்பாக பெண்களுக்கு தாங்கள் செய்த சாதனைகளான கட்டணமில்லா பேருந்து சேவை, உரிமைத் தொகை, பள்ளி செல்லும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி, உயர்கல்வி படித்து கல்லூரிக்கு செல்லும் மாணவர்களுக்கு மாதந்தோறும்1000ரூபாய் என்று தங்கள் அரசின் மூலம் பலன் அடைந்த பொது மக்களை சந்தித்து சாதனைகளை சொல்லி வாக்கு கேட்பதற்கு தனது தொண்டர்களிடம் உத்தரவிட்டிருக்கிறார் முதல்வர். ஆனால் களத்தில் வேறு மாதிரியான எதிர்ப்புகள் உருவாகின்றன!

**என்ன எதிர்ப்புகள்?**

திமுகவுக்கு எதிராக நாம்

தமிழர் சீமான், த.வெ.க.விஜய், பா.ம.க அன்புமணி, பிரபலமான யூடியூபர்கள் என்று பலமான திமுக எதிர்ப்பு பிரச்சாரம் வெவ்வேறு தளங்களில் உருவாகி வருகிறது. அதை முறியடிக்கும் விதத்தில் திமுக செயல் பட்டாலும் கூட....


**என்ன ஆச்சு?**

கூட்டணி கட்சிகளுக்கு உள்ளே குழப்பத்தை உண்டு பண்ணுகின்ற வேலையும் நடந்து வருகிறது.

**என்ன சொல்றீங்க?**

கூட்டணிக் கட்சிகள் பொதுவாக வலுவாக சொல்லப்பட்டாலும் காங்கிரஸ் கட்சியில் இருக்கும் சிலர் திமுகவுக்கு எதிர்ப்பு மன நிலையிலேயே இணையதளங்களின் மூலம் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். குறிப்பாக திருச்சி வேலுச்சாமி, அமெரிக்க நாராயணன், பிரவீன் சக்கரவர்த்தி, என்று காங்கிரசுக்கு உள்ளே இருந்து கொண்டு காங்கிரஸ் திமுக கூட்டணிக்கு எதிராக பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இதனால் திமுகவிற்கு வருகின்ற சொற்ப காங்கிரஸ் வாக்குகள் சிதறி விடுமோ என்கிற அச்சம் திமுகவின் அடிமட்ட தொண்டர்கள் இடத்திலே இருக்கிறது.






அதுபோக மாதத்துக்கு ஒருமுறை அமித்ஷா வந்து திமுகவின் மீது பகிரங்க குற்றச்சாட்டுகளை சொல்லிவிட்டு இங்கே இருக்கின்ற பா.ஜ.கவினரை திமுகவுக்கு எதிராக வலுவாக கட்டமைத்து விட்டு செல்கிறார்.

இதையெல்லாம் திமுக எப்படி எதிர்கொண்டு சமாளிக்கப் போகிறது என்பதுதான் இப்போதுள்ள திமுக தொண்டர்கள் மனதில் இருக்கிற கேள்வி.

அதிமுகவை பொறுத்தவரை எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பா.ஜ.க அமித்ஷா என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்ய தயாராக இருக்கிறார். எப்படி 2026 இல் ஆட்சி அமைத்து விடுவோம் என்ற நம்பிகசெய்கிறார்!

தி.மு.கவின் மீது பலமாக விமர்சனம் செய்கிறார். அடுத்த மாத இறுதியில் தேர்தல் அறிவிப்பு வரலாம் என்கிறார்கள் என்ன நடக்கிறது என்று பார்ப்போம் என்று சொல்லிக் கொண்டு வெளியேறினார் கபாலிகான்.

# உயிரைக் காத்த கொத்தமல்லி!



கொத்தமல்லி இரண்டு நாட்களில் இறந்துவிடுவார் என மருத்துவரால் கைவிடப்பட்டு மரணத்தின் வாசலிலிருந்த தனது சித்தப்பாவை கொத்தமல்லி இலைச்சாறு கொடுத்து காப்பாற்றிய ஒரு அற்புதம்!

அரவக்குறிச்சி பெரியாஸ்பத்திரி வார்டில் ஓர் கிழிந்த துணிபோல படுத்திருந்தார் தாத்தா. உழைத்து மெலிந்த தேகம். 84 வது வயதில் கல்லீரல் சுத்தமாய் பழுதாகி போய் மரணத்தின் நாட்களை மருத்துவமனையில் எண்ணி கொண்டிருந்தார்...

ரவுண்ட்ஸ் வந்த சீஃப் டாக்டர் வீரமணி தாத்தாவின் கைநாடியை பிடித்து பார்த்துவிட்டு மேவாயை தடவியபடியே.... இன்னும் இரண்டு நாள்தான் தாங்குவார் சொந்த காரங்களுக்கு எல்லாம் சொல்லி அனுப்பிடுங்க.

வீட்டுக்கு எடுத்துட்டு போய்டுங்க என்று கூறியபடியே அவர் பிள்ளைகளின் பெருங்குரலெடுத்த அழுகையை காதில் வாங்கிக்கொள்ளாமல் அடுத்த நோயாளியை பார்க்க நகர்ந்தார்...

ஆம்புலன்ஸில் வீட்டுக்கு கொண்டுவரப்பட்டார் வீரமணி தாத்தா. அவர் மூச்சு எப்போது வேண்டுமானாலும் நின்று விடுவேன் என்று போக்கு காட்டியது கட்டிலில் மூச்சுவிட சிரமப்பட்டபடி கண்மூடி படுத்திருந்தார் தாத்தா.

தம் தங்கை முறையான தாத்தாவின் மகளிடம் விசாரித்தார் அக்கா...

" சாப்பாடு இறங்குதா..?"

"அப்பப்போ கூழாக ஏதாவது கொடுக்கிறோம். கொஞ்சமா உள்ளே போகுது"

"நான் ஒன்னு சொன்னா கேட்பியா தங்கச்சி"

"சொல்லுக்கா... நான் என்ன செய்யனும்...?"

"எப்படியும் இரண்டு நாளில் இறந்திடுவார்னு டாக்கடர் சொல்லிட்டாரு இல்ல.

கடைசியா ஒரு முயற்சி செய்து பார்ப்போம்...

இன்னிலிருந்து இந்த இரண்டு நாளும் வெறும் மல்லிச்சாறு மட்டுமே கொடுப்போம். அது கழிவுகளை வெளியேத்தி புது ரத்தத்தை ஊற வைக்கும். சித்தப்பா எழுந்து உட்காருவார்னு எனக்கு நம்பிக்கை இருக்கு.." சரோஜா அக்காவின் கண்களில் அத்தனை உறுதி.

அவர்கள் குடும்பத்தில் சரோஜா அக்கா மீது மிகுந்த மரியாதை உண்டு. குடும்ப உறுப்பினர்கள் ஒன்றுகூடி ஆலோசித்தனர். அந்த குடும்பத்தின் ஆணிவேர் வீரமணி தாத்தா. அவர் இன்னும் சிலகாலம் உயிரோடு இருந்தால் அதுபோல வேறு சந்தோசம் உண்டா..?

அக்காவின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டனர். வீட்டில் மல்லிச்சாறு தயாரானது. ஓர் எதிர்பார்ப்போடும், பரபரப்போடும் அங்கும் இங்கும் ஓடினர். தாத்தாவை மடியில் கிடத்தி மால்லிச்சாறை அவர் வாயில் சிறிது சிறிதாக புகட்டினர். இரண்டுநாள் முழுக்க மல்லிச்சாறு மட்டுமே..! இடையிடையே கொஞ்சமாய் பழச்சாறும்.

டாக்டர் விதித்த கெடு இன்றோடு முடிகிறது. நாளை விடியலில் தாத்தா உயிரோடு இருப்பாரா என்கிற பதைபதைப்பில் உறவினர்கள் எல்லாம் தாத்தாவையே சுற்றி வந்தனர். இரவு உறங்கி போனது...

மூன்றாம் நாள் விடியலில் நெஞ்சு திக்... திக்.. என அடித்து கொள்ள சொந்தங்கள் தாத்தாவை நெருங்கி சென்றனர். கண்மூடி படுத்திருந்தவர்..... ஓர் இருமலோடு விழித்து கொண்டார்

ஓடு... மல்லிஜூஸ் எடுத்துட்டு வாங்க.. ஐயாவுக்கு கொடுப்போம். எங்கிருந்தோ குரல் ஒலித்தது....,

மீண்டும் ஓர் இருமல் இருமியபடி தாத்தா எழுந்து





உட்கார்ந்தார். "ஏன் புள்ள என்ன பார்த்து அழுதுகிட்டு நிக்கித. எதுக்கு இம்புட்டுபேரு வந்திருக்காங்க" தன் மனைவியை கேள்வியோடு பார்த்தார் வீரமணி தாத்தா.

இந்த எண்பத்தாறு வயதிலும் ஆரோக்கியமாய் இருக்கிறார். நாம் பார்க்கசென்ற நேரம் மனிதர் கட்டிலில் ஒய்யாரமாய் படுத்திருந்தார். எவர் துணையுமின்றி எழுந்து நடமாடுகிறார். தொடர்ந்து..." இந்த மல்லிசாறை எல்லா ஏழை,பாளைகளும் குடிக்கோணும்.

டாக்டர் கிட்டபோயி ஆயிரகணக்குல செலவு பண்ணியும் குணமாகத என் நோய் இந்தமல்லிசாறால குணமாயிட்டுதே. எனக்கு இருந்த சுகர்நோயும் இப்ப இல்ல. மல்லிச்சாறு பத்தி எல்லா மக்களுக்கும் எடுத்து சொல்லுங்கள்!

**அமிர்த பானம் கொத்தமல்லி இலைச்சாறு தயாரிப்பது எப்படி?:**

நாட்டு கொத்துமல்லி இலை - கால் கட்டு, தேங்காய் - 1, நாட்டு சர்க்கரை - தேவையான அளவு.

சுத்தம் செய்த கொத்துமல்லி இலையுடன் தேங்காய் சேர்த்து அரைத்து வடிகட்டவும். இதன் கூட தேவையான அளவு தண்ணீர், நாட்டு சர்க்கரை கலந்து பருகலாம். இந்த சாற்றினை கண்டிப்பாக அடுப்பில் வைக்க கூடாது. வெறும் கொத்துமல்லி இலைச்சாறுடன் எலுமிச்சை சாறு,உப்பும்,மிளகு தூளும் சேர்த்து அருந்தலாம்.

கொத்துமல்லி இலைச்சாறுடன், பசும்மோர், உப்பும் கலந்தும் அருந்தலாம்.

கொத்துமல்லி இலைச்சாறு அருந்தும் நாள் அன்று பசிக்கும் போது மட்டுமே சாப்பிட வேண்டும்.

இதை தொடர்ந்து பருகுவதால் காமாலை, கேன்சர் போன்ற மிகக் கொடிய நோய்கள் அனைத்தும் குணமாகும்.

உடலில் உள்ள கழிவுகள் அனைத்தையும் வெளியேற்றும்.வயிறு சம்பந்தபட்ட அனைத்து பிரச்சினைகளையும் குணமாக்கும்.கல்லீரலை பலப்படுத்தும். பித்தம் கட்டுக்குள் இருக்கும்.இதை தயார் செய்வது மிகவும் எளிதானது.

இதை அனைவரும் பருகலாம், தினமும் தண்ணீர்க்கு, டீ, காபிக்கு பதில் இதை அருந்தலாம். கொத்துமல்லிக்கு பதில் கருவேப்பிலையும் , புதினாவையும் இதே போன்று சாறு தயார் செய்து உபயோகிக்கலாம்.

ஆனாலும் கொத்துமல்லி இலைச்சாறுதான் சிறந்தது...

# பெட்ரோல் டீசல் உருவானது எப்படி?

**நா**ம் எங்கே சென்றாலும் வாகனங்களில் பயணிக்கிறோம். பக்கத்துத் தெருவில் இருக்கும் மளிகைக் கடைக்குப் போனாலும் கண்டம் விட்டுக் கண்டம் போனாலும் வாகனங்கள்தாம் உதவுகின்றன. சைக்கிள் போன்றவற்றைத் தவிர்த்து இருசக்கர வாகனங்கள் தொடங்கி விமானம் வரை அனைத்து வாகனங்களும் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருள்களால்தாம் இயங்குகின்றன. மனித நாகரிகம் அசுர வளர்ச்சி அடைந்ததற்குக் காரணமே எரிபொருள்கள்தாம்.

இது ஒரு பக்கம் என்றால், இந்த எரிபொருள்களுக்காக உலகின் ஏதோ ஒரு மூலையில் போர்கள் நடைபெறுகின்றன. லட்சக்கணக்கான மனிதர்கள் கொல்லப்படுகிறார்கள். உலக அரசியலே மாறுகிறது. இவ்வளவு பயனையும் பாதிப்பையும் ஏற்படுத்தும் எரிபொருள்கள் எங்கிருந்து வந்தன?

நம் பூமியில் பல கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நுண்ணுயிரிகளும் தாவரங்களும் இறந்தவுடன் சதுப்பு நிலங்களிலும் கடலுக்கு அடியிலும் புதைந்தன. அவற்றின் உடல்கள் பல லட்சம் ஆண்டுகளாக மக்கிச் சிதையும்போது அங்குள்ள தாதுப்பொருள்களுடன் கலந்து, கார்பன் அதிக அளவில் உள்ள படிவங்களாக மாறிவிடுகின்றன. இந்தப் படிவங்கள் வெப்பம், அழுத்தத்துக்கு உள்ளாகும்போது, அவை புதைப்படிவ எரிபொருளாக (Fossil Fuels) உருமாறுகின்றன.

புதைப்படிவ எரிபொருள்களில் மூன்று வகைகள் இருக்கின்றன. அவை நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு ஆகியவை. பூமியில் உள்ள கரிமப்பொருள்களின் கலப்பு (Organic Matter), எவ்வளவு காலத்துக்கு அவை புதைந்திருந்தன, எந்த அளவிலான வெப்பத்துக்கும் அழுத்தத்துக்கும் உள்ளாகின என்பதைப் பொறுத்து அது எந்த வகை எரிபொருளாக மாறுகிறது என்பது முடிவாகும்.

இந்தப் புதைப்படிவ எரிபொருள்கள்தாம் உலகத்துக்குத் தேவையான 80% ஆற்றலை வழங்குகின்றன. நிலத்துக்கு அடியில் சுரங்கம் அமைத்தோ, கடலுக்கு அடியில் கிணறு அமைப்பதன் மூலமோ இந்த எரிபொருள்களை எடுத்து, சுத்திகரித்துப் பயன்படுத்துகிறோம். நாம் பயன்படுத்தும் பெட்ரோல், டீசல் ஆகியவை கச்சா எண்ணெய் வகையைச் சேர்ந்தவை.





பூமியின் எண்ணெய் வளங்கள் 54 கோடி ஆண்டுகளுக்கு முன்பே உருவானவை. அதாவது பூமியில் சிக்கலான உயிரின வகைகள் தோன்றுவதற்கு முன்பே எரிபொருள்கள் உருவாகிவிட்டன. இன்று நாம் பயன்படுத்தும் பெரும்பாலான எரிபொருள்கள் டைனசோர்கள் வாழ்வதற்கு முன்பு இருந்த கார்போனிஃபரஸ் காலத்தில் உருவாகத் தொடங்கியவை.

பொதுவாகக் கச்சா எண்ணெய் உருவாவதற்குச் சில லட்சம் ஆண்டுகளாவது ஆகும் எனச் சொல்லப்படுகிறது. இருப்பினும் அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் 5 ஆயிரம் ஆண்டுகளில் உருவான எண்ணெய் வளம் காணப்படுகிறது. ரஷ்யாவின் காம்சாட்கா பகுதியில் 50 ஆண்டுகளில் உருவான எண்ணெய் வளத்தையும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இன்று நாம் பயன்படுத்தும் பெரும்பான்மையான கச்சா எண்ணெய் டெத்திஸ் கடல் என்கிற பண்டைய கடலின் அடியில் உருவானவை. இந்தக் கடல் காலப்போக்கில் கண்டங்களின் நகர்வால் மூடப்பட்டுவிட்டது. அந்தப் பகுதிதான் இன்றைய மத்தியக் கிழக்கு நிலப்பரப்பு. அதனால்தான் உலகின் மூன்றில் இரண்டு பங்கு கச்சா எண்ணெய் மத்தியக் கிழக்கு நாடுகளில் இருந்து கிடைக்கிறது.

மனித இனம், மின்சாரத்தில் இருந்து போக்குவரத்து வரை இந்த எரிபொருள்களை ஏதோ ஒருவகையில் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துகிறது. அவை இல்லை என்றால் நம் தினசரி வாழ்க்கையே கடினமாகிவிடும் என்கிற சூழல் உருவாகிவிட்டது.

இன்று நாம் பயன்படுத்தும் 96% கருவிகள் இந்தப் புதைப்படிவ எரிபொருள்களால் கிடைக்கும் ஆற்றலைக் கொண்டுதான் இயங்குகின்றன. அது மட்டும் அல்லாமல் பிளாஸ்டிக், ரப்பர் போன்றவையும், விவசாயத்துக்குப் பயன்படும் செயற்கை உரங்கள் போன்றவையும் இந்தப் புதைப்படிவ எரிபொருள்களில் இருந்து கிடைக்கும் துணைப் பொருள்களே.

இந்த எரிபொருள்களை நாம் பயன்படுத்தத் தொடங்கியதால்தான் தொழிற்புரட்சி உருவாகி, மனித இனம் வேகமாக நவீனமடைந்தது. நமது வாழ்வாதாரம் உயர்ந்தது. அதேநேரம் இந்த எரிபொருள்களின் வணிகத்தைக் கட்டுப்பாட்டில் வைப்பதற்கு உலக அளவில் போர்களும் நடைபெறுகின்றன. உலகப் பொருளாதாரத்தையே இந்த எரிபொருள்கள் கட்டுப்படுத்துகின்றன.

இது ஒருபுறம் என்றால், நமக்குக் கிடைத்திருக்கும் எரிபொருள்களை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தி அவற்றின் கழிவுகளால் சுற்றுச்சூழலையும் நாம் சீரழித்துவருகிறோம். எந்த அளவுக்கு எரிபொருளால் நமக்கு நன்மை விளைகிறதோ அதே அளவு அழிவுக்காகவும் அதை நாம் பயன்படுத்துகிறோம் என்பது வேதனையானது.

உண்மையில் இன்று நாம் பயன்படுத்தும் எரிபொருள் அனைத்தும் சேகரித்து வைக்கப்பட்ட சூரிய ஆற்றல்தான். தாவரங்கள், நுண்தாவரங்கள் ஆகியவை ஒளிச்சேர்க்கை மூலம் சூரிய ஒளியை ஆற்றலாக மாற்றி உடலில் சேகரிக்கின்றன. அவை இறந்தவுடன் பூமியில் புதைந்து எரிபொருள்களாகின்றன.


எஸ்.சூர்யா

அந்த எரிபொருள்களை நாம் பயன்படுத்தும்போது, சேகரித்து வைத்த சூரிய ஒளிதான் வேறு வடிவத்தில் ஆற்றலாகப் பயனளிக்கிறது. அதனால், நீங்கள் அடுத்தமுறை வாகனத்தில் செல்லும்போது 50 கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உயிரினங்களுக்கு நன்றி சொல்ல மறக்காதீர்கள்.

# எம் பதில்கள்



**ஆருத்ரா தரிசனம் என்பதில் என்ன சிறப்பு!**

*- பொன்.வேலாயுதம், தொழுதாவூர்*

காரைக்கால் அம்மையார் தலைகீழாக சிவனை வணங்கி திருவாலங்காடு சென்ற ஊரில் இருக்கிறீர்கள். அந்த ஊருக்கு பெயர் ரத்தின சபை.

பஞ்ச சபைகளான திருவாலங்காடு ரத்தின சபை, சிதம்பரம் பொன்னம்பலம், மதுரை வெள்ளியம்பலம், திருநெல்வேலி தாமிர சபை, குற்றாலம் சித்திர சபைகளில் இந்த அபிஷேகங்களைத் தரிசிப்பது மிகவும் சிறப்பு.

வருடத்துக்கு ஆறு முறை நடராஜர் அம்பலத்தில் இருந்து கீழே இறக்கப்பட்டு அபிஷேகங்கள் ஆராதனைகள் வீதி உலா முடித்து மீண்டும் சபையில் அமர்த்துவார்கள். மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில், நடராஜருக்கு அபிஷேகம் நடத்தும். இதை, ஆருத்ரா தரிசனம் என்பார்கள்.

**நீர்வான் ட்ரோன் பற்றி.....**

*- ஆர்.வினோத், பூந்தமல்லி*

பாதுகாப்புத் துறையில் ஒரு மைல்கல்லாக, ஒரே நேரத்தில் நீருக்கு அடியிலும் மற்றும் வான்வெளியிலும்



தடையின்றி இயங்கக்கூடிய ஒரு உள்நாட்டு ஆளில்லா கருவியை (Unmanned System) BDL மற்றும் NSTL இணைந்து உருவாக்கி வருகின்றன.

இது கடலுக்கு அடியில் சென்று உளவு பார்க்கவும், அடுத்த நொடியே நீரிலிருந்து மேலே எழும்பி வான்வழியாகக் கண்காணிக்கவும் கூடிய திறன் கொண்டது.

எதிரிகளின் நடமாட்டத்தைக் கண்டறிதல் (Surveillance) மற்றும் ரகசியத் தகவல்களைச் சேகரிக்கும் (Reconnaissance) பணிகளுக்காக இது வடிவமைக்கப்படுகிறது.

இந்தியக் கடற்படையின் கண்காணிப்புத் திறனை இது பன்மடங்கு அதிகரிக்கும்.

**சிவகுரு பிரபாகரன் ஐ.ஏ.எஸ். அவர்கள் பற்றி...**

*- என். சரவணன் வியாசர்பாடி*

சிவகங்கையைச் சேர்ந்தவர், ஆரம்பத்தில் பிளாட்பாரத்தில் தூங்கி கூலி வேலை செய்து படித்தவர், UPSC தேர்வில் வெற்றி பெற்று IAS ஆனார்.

சிவகுரு பிரபாகரன் IAS, கோயம்புத்தூர் மாநகராட்சியின் தற்போதைய ஆணையாளர் (Commissioner) ஆவார், இவர் தனது கடின உழைப்பு, விடாமுயற்சி மற்றும் ஏழ்மையான பின்னணியிலிருந்து IAS அதிகாரியாக உயர்ந்தது மூலம் பல இளைஞர்களுக்கு உத்வேகம் அளித்து வருகிறார்; மர ஆலை வேலை முதல் ஐ.ஏ.எஸ். அதிகாரி வரை அவர் கடந்து வந்த பாதை, பலருக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

தனது வாழ்க்கை மூலம், இளைஞர்களுக்கு விடாமுயற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வருகிறார்.






**மெட்ரோ சேவை பயணத்துக்கு எளிதாக மாறி உள்ளதே!**

*- து.சண்முகம் வடபழனி*

பயணங்கள் இப்போது எல்லாம் எளிதாக ஆகிவிட்டது. சொகுசு பேருந்துகள், மின் பேருந்துகள், மெட்ரோ ரயில்கள்.

பைக் டாக்ஸி, கால் டாக்ஸி என்று பல்வேறு வகைகளில் சென்னையில் எளிதாக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்தை கடக்கும் சூழல் வந்து விட்டதால் இனி போக்குவரத்துக்காக காத்திருக்கின்ற வேலை இல்லை அந்த வகையில் மெட்ரோ ரயிலின் புதிய திட்டமாக பூந்தமல்லி முதல் கோடம்பாக்கம் வரை விரைவில் ரயில் சேவை துவங்க உள்ளது இன்னும் சிறப்பான ஒன்றாகும். பூந்தமல்லி முதல் வடபழனி வரையிலான 15.8 கிலோ மீட்டர் தூரத்திற்கான ரயில் சேவைகள் அடுத்த மாதம் முதல் தொடங்கப்பட உள்ளன. இந்த புதிய வழித்தடம் திறக்கப்படுவதால், பூந்தமல்லி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பயண நேரம் வெகுவாக குறையும்.

மேலும், சென்னையின் பல்வேறு பகுதிகளுக்கு எளிதாக பயணிக்க முடியும். மெட்ரோ ரயில் சேவைகள் தொடங்குவது, சாலைப் போக்குவரத்தின் நெரிசலைக் குறைக்கவும் உதவும்.

# வரம் தரும் நாகாத்தம்மன்! இடம் மாற்ற வேண்டாம்!

## பத்திரிகையாளர் நந்தகுமார் கோரிக்கை!



அருள்மிகு ஸ்ரீ நாகாத்தம்மன் திருக்கோயில் சுமார் 70 ஆண்டுகள் மேலாக அண்ணாநகர் மற்றும் வில்லிவாக்கம் பகுதியை இணைக்கும் திருமங்கலம் ரோடு என்னும் சாலையில் அமைந்துள்ளது. இந்த கோவில் ஆனது ரயில்வே துறைக்கு சொந்தமான இடத்தில் 70 ஆண்டுகள் முன்பே அமைக்கப்பட்டது. அன்றிலிருந்து 2022 மே மாதம் வரை, இந்த நாகாத்தம்மன், அண்ணா நகர் மற்றும் வில்லிவாக்கம் பகுதியில் வசிக்கக்கூடிய பொது மக்களுக்கு, உயிர் காக்கும் ஈசனாக, வினை தீர்க்கும் காளியாக, நோய் தீர்க்கும் வைத்தீஸ்வரராக, பசி தீர்க்கும் அன்னப்பூரணியாக, குழந்தை வரம் கொடுக்கும் பராசக்தியாக, தனம் கொடுக்கும் தனலட்சுமியாக, வாழ்வாதாரத்தை பிரகாசமாக்கும் சீனிவாச பெருமாளாக அருள்பாலித்து கொண்டு வந்தார். மே மாதம் 2022 அன்று, ரயில்வே துறை அங்கு மேம்பாலம் கட்டுவதற்காகவும், ஏனைய தொழிற்சாலை வளர்ச்சிக்காகவும் இந்த இடத்தை வேண்டும் என்று முறையே சட்டபூர்வமான கடிதம் கொடுத்து எடுக்கும் படி கோவில் நிர்வாகத்திற்கு அறிக்கை கொடுத்து, அதன்படி நிர்வாகமும், கோவிலை தக்க வைப்பதற்காக, பல்வேறு முயற்சிகளை இந்த பகுதி மக்கள் முன்னெடுத்து வந்தனர். அம்மனின் சக்தியை முழுமையாக உணர்ந்த பத்திரிக்கையாளர் நந்தகுமார் அவர்கள் கோயில் இடம் மாற்றப்படாமல் இருப்பதற்காக பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறார் . இதற்காக தலைநகர் டெல்லி சென்று அங்கு முக்கிய தகவலை சந்தித்து இதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறார்.







நாகாத்தம்மனின் அருளால் திருமணம் கைகூடி குழந்தை வரம் பெற்று உடல் நலம் காத்து உயிர்கள் காக்கும் வேலை வாய்ப்பு கிடைத்து குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவுகிறது என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்து மற்றவர்களுக்கும் அதை பரிகாரமாக சொல்லி வருகிறார்கள்.

வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அருளும் நாகாத்தம்மன் செய்யக்கூடாது என்று டெல்லி சென்றுள்ள பத்திரிக்கையாளர் திரு. நந்தகுமார் அங்கு ரயில்வே துறை இயக்குனரையும், ஆளும் பாஜகவின் முக்கிய தலைவர்களையும் சந்தித்து கோரிக்கை நிறைவேற்ற தர வேண்டுகோள் விடுத்துள்ளார். அவரின் முயற்சி வெற்றி பெற்று நாகாத்தம்மன் இடிக்கப்படாமல் இருக்கவும் உடனே அந்த கோயிலை திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்திடவும்

உரிய முயற்சிகளை எடுத்து வருகிறார் நந்தகுமார். அவரின் முயற்சி வெற்றி பெற நாகாத்தம்மன் அருள் புரிய வேண்டுகிறோம்!



# கொலை செய்துவிட்டு சிறைக்குச் சென்று திரும்பியவர், எம்பிபிஎஸ் படித்து முடித்து டாக்டர் ஆகி சாதனை!

**வா**ழ்க்கையில்எந்தநிலையில்இருந்தாலும் எப்போது வேண்டுமானாலும் சாதிக்கவும், புதிய வாழ்க்கையைத் தொடங்கவும் முடியும் என்பதை நிரூபித்துள்ளார் ஒரு இளைஞர். கொலைக் குற்றத்தில் 14 ஆண்டுகள் நீண்ட சிறைவாசம் அனுபவித்துவிட்டு வெளியே வந்த அவர்இன்று எம்பிபிஎஸ் படித்து முடித்து டாக்டர் ஆகி இருக்கிறார்!

1997ஆம் ஆண்டு. பள்ளிப்படிப்பை நிறைய மதிப்பெண்களோடு படித்து முடித்து வெளியே வந்த அந்த இளைஞனுக்கு யாருடைய சிபாரிசும் இல்லாமலே கிடைத்தது மருத்துவ படிப்புக்கான இடம். மிகப்பெரும் டாக்டராகி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற கனவில் இருந்த அந்த இளைஞன் பெங்களூருவில் 1997ஆம் ஆண்டு எம்பிபிஎஸ் படிப்பில் சேர்ந்தார்.

இவ்வளவுக்கும் அவர் பின்தங்கிய ஒரு கிராமத்தில் பிறந்து அங்கேயே பள்ளிப் படிப்பும் படித்து முடித்தவர்.கர்னாடகா மாநிலம் அப்சல்ஃபுர் தாலுகா போசாகா கிராமத்தைச் சேர்ந்த சுபாஷ் துக்காராம் பாட்டீல் என்பவரே அவர்.

படிக்கும் போது, அவர் இருந்த பகுதியைச் சேர்ந்த மிகப்பெரிய தனவந்தரும் ஒப்பந்ததாரருமான அசோக்கின் மனைவி பத்மாவதியை எதேச்சையாகக் கண்டார் சுபாஷ்.பத்மாவதியும் இளைஞரைக் கண்டார். இருவருக்குமிடையே பற்றிக்கொண்டது காதல் நெருப்பு.. அசோக் இல்லாத நேரங்களில் வீட்டிலும், பணி நிமித்தமாக வெளியூர் செல்ல வேண்டிய சூழ்நிலையில் வெளியிடங்களிலும் இருவரும் சுற்றித்திரிந்து தங்கள் வேட்கையைத் தணித்துக் கொண்டனர். இருவருக்குமிடையே உள்ள தவறான உறவு அரசல் புரசலாக அசோக்கின் காதுகளுக்கு எட்டியது. முதலில் நம்பவில்லை என்றாலும், பிற்பாடு இருவரையும் வீட்டில் கட்டில் அறையில் அலங்கோலமான நிலையில் கண்டபோது ஆத்திரம் தலைக்கேற சுபாஷைக் கூப்பிட்டு இனிமேல் இங்கு வரக்கூடாது என்று கண்டித்தார் அசோக்.

வாலிப வயதின் வேட்கை மட்டுமல்லாது, ருசிகண்ட பூனையாகவும் இருந்த சுபாஷ் தான் இன்னது செய்கிறோம் என்ற தன்னிலை மறந்தார். அன்றே ஒரு துப்பாக்கி வாங்கி, மறைத்து எடுத்து வந்து, அசோக்கை

சுட்டுக் கொன்றுவிட்டு, நிம்மதிப் பெருமூச்சு விட்டார். கொன்றபின் தன் சுயநினைவுக்கு வந்த சுபாஷ் தான் எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டோம் என்பதை காலம் கடந்து உணர்ந்து முடிப்பதற்குள் காவல்துறையினரின் கைகளில் வசமாக மாட்டிக் கொண்டார். சிறைக்கும் சென்றார்.

ஐந்து ஆண்டுகள் விசாரிக்கப்பட்ட இந்த வழக்குக்கான தீர்ப்பை நீதிமன்றம் 2002 இல் வழங்கியது. சுபாஷுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. பரப்பன அக்ரஹாரா பெங்களூரு சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது அவர் எம்பிபிஎஸ் இரண்டாம் ஆண்டு மாணவராக இருந்தார்.

சிறையில் இருந்தபோது, சிறைத் துறை மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு உதவி செய்யும் பணியை மேற்கொண்டு வந்தார் சுபாஷ். சிறையில் இருக்கும் கைதிகளில் காசநோய் பாதித்தவர்களுக்கு சிகிச்சை அளித்து அவர்களை நோயில் இருந்து மீட்க உதவியதற்காக சிறை நிர்வாகம் இவரை கௌரவித்தது.

ஆயுள் தண்டனை முடித்துவிட்டு, 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று வெளியே வந்த சுபாஷ், ராஜீவ் காந்தி பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து எம்பிபிஎஸ் படிக்க அனுமதி பெற்றார். 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் எம்பிபிஎஸ் படித்து முடித்தார். அதன்பிறகு, ஒரு வருடம் இன்டர்ன்ஷிப் பயிற்சியை முடித்துவிட்டு அதற்கான சான்றிதழ் பெற்றார்.

தன்னை விட 18 வயது குறைவான மாணவர்களுடன் எவ்வித சங்கடமும் இன்றி வெற்றிகரமாக படித்து முடித்தார். கடந்த ஆண்டு முதல் எம்ஆர்எம்சியில் உள்ள பஸவேஸ்வர் மருத்துவமனையில்பணியாற்றி வருகிறார்.

சிறையில் இருந்த போதே, சுபாஷ் எம்ஏ இதழியல் படிப்பும் படித்து முடிந்தார். இப்போதைய மனநிலை பற்றி அவர் கூறுகையில், "சிறை வாழ்க்கை,எனக்கு வாழ்க்கைப் பற்றிய பல புரிதல்களை உண்டாக்கியது. சிறையில் இருக்கும் நோயாளிகளை அவ்வப்போது கவனித்துக் கொண்டேன். புத்தகங்கள் நிறைய படித்தேன். அவை எனக்குள் பெரும் மாறுதல்களைத் தந்தது. இதனால் புதிய மனிதனாக சிறையிலிருந்து வெளிவந்த நான் இந்தச் சமூகத்திற்கு ஏதாவது உருப்படியாகச் செய்ய வேண்டும் என்று எண்ணினேன். அதன் விளைவாக எனக்கு மிகவும் பிடித்த மருத்துவப் படிப்பை தொடர்ந்து படித்து முடித்தேன். இன்று பட்டம் பெற்று டாக்டராகி விட்டேன். முதலில் சிறிய அளவில் கிளினிக் ஒன்றைத் தொடங்கி, நடத்த வேண்டும்.அதில் சிறையில் இருக்கும் கைதிகளின் உறவினர்களுக்கும், இராணுவ வீரர்களின் குடும்பத்தாருக்கும் இலவச சிகிச்சை அளிக்க வேண்டும். இதையே என்னுடைய வாழ்நாளில் நோக்கமாகக் கொண்டு இப்போது செயல்பட்டு வருகிறேன்" என்கிறார்.



சிந்திக்காத சிறு நொடி தந்தது,சிறைவாசம்... நீள் சிறைவாசத்துச் சிந்தனையில், உதித்தது மானுடநேசம்!

# அமெரிக்க விண்கல விமானிகளுக்கு பயிற்சி அளித்த மதுரை சொக்கப்பா!



நிலவில் முதன்முதலில் சென்றவர்கள் யார் என்றால் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த அப்பல்லோ விண்கலத்தை இயக்கியவர் மைக்கேல் காலின்ஸ் என்றும் நிலவில் இறங்கியவர்கள் நீல் ஆர்ம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ட்ரின் என்றும் மிகச் சுலபமாக எல்லோரும் சொல்லி விடுவார்கள். அவர்கள் சென்ற ராக்கெட்டில் அதன் தலைமையகமாக விளங்கும் கட்டுப்பாட்டுப் பகுதியை வடிவமைத்து, ராக்கெட்டை இயக்கிய விமானிகளுக்குப் பயிற்சி அளித்தவர் மதுரை சொக்கப்பா.

பால்ராஜ் சொக்கப்பா 1930 செப்டம்பர் 20 அன்று மதுரையில் பிறந்தார். அவரின் தந்தை அமெரிக்க மிஷனின் பொருளாளராக இருந்ததால் குடும்பம் அவர்கள் வழங்கிய வீட்டில் வசித்தது. அவருடைய தாயார் பெண்கள் தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். எனவே, அவர் தன் தாயாரின் பள்ளியிலேயே தொடக்கக் கல்வி பயின்றார்.பின் இடைநிலைக் கல்வியைப் புகழ்வாய்ந்த சேசுசபையினர் நடத்தும் தூயமரியன்னை பள்ளியில் பயின்றார்.

அக்காலத்தில் அது பி.யூ.சி. அதாவது புகுமுக வகுப்பு என அழைக்கப்பட்டது. இடைநிலைக் கல்வியை முடித்தபிறகு சென்னைப் பல்கலைக்கழகத்தில் மின்பொறியியல் துறையில் இளநிலைக் கல்வி பயின்று முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றாலும் அவருக்கு அக்காலத்தில் அவர் படித்த பொறியியல் துறை சார்ந்த வேலை கிடைப்பது அரிதாக இருந்தது.

பின் அவர் வேறு வழியின்றி அரசின் உதவித்தொகையோடு கூடிய பயிற்சியை வழங்கும் பிரிட்டிஷ் நூற்பாலை நிறுவனத்தில் வேலை செய்யத் தொடங்கினார்.சுமார் ஏழு மாதங்கள் அங்கு பணியாற்றிய அவர் கல்லூரி ஆசிரியராக வேண்டும் என்கிற எண்ணத்தில் சென்னையில் தனியார் கல்லூரி ஒன்றில் ஆசிரியராகச் சேர்ந்தார். இருப்பினும் அவரது பணி தற்காலிகமாக இருந்ததால் உதவித்தொகையுடன் உயர்கல்வி கற்கும் பொருட்டு பல வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்திருந்தார்.

அமெரிக்காவில் உள்ள ஓகியோ மாநிலப் பல்கலைக்கழகத்தில் பயில 1954இல் அழைப்பு வந்தது.

அங்கு பெர்கலி பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். படித்துக் கொண்டிருக்கும் போதே, மின் பொறியியலில் முதுநிலைக் கல்வி பயின்றுகொண்டே வாஷிங்டனில் உள்ள சேசுசபையினர் நடத்தும் சியாட்டில் பல்கலைக்கழகத்தில் ஆசிரியப் பணியும் செய்தார்.






இரண்டாம் உலகப்போர் முடிவடைந்திருந்த சமயம் அமெரிக்கா ரஷ்யா மீது அச்சம் கொண்டிருந்தது. குறிப்பாக ரஷ்யாவின் பலிஸ்டிக்ஸ் ஏவுகணைக்குப் பயந்தது. எனவே, பாதுகாப்பு கருதி ஏவுகணைகள் எல்லைப் பகுதியில் வந்தால் முன்னெச்சரிக்கை கொடுக்கும் ரேடார்கள் நவீன முறையில் வடிவமைக்கப்பட்டு கனடா முழுவதும் பொருத்தும் பணியை மைட்டர் நிறுவனமும் விமானப்படையும் சேர்ந்து செய்தன.

அதில் சொக்கப்பா விமானப் போக்குவரத்துப் பிரிவில் பணி செய்தார். அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடி முதன் முதலில் நிலவிற்கு மனிதனை அனுப்பும் திட்டத்தை அறிவித்தார். எனவே, அந்நிறுவனம் அப்பலோ ராக்கெட்டை வடிவமைக்க நிபுணர்களை அழைத்தது. அதில் சொக்கப்பா கலந்துகொண்டார்.

அப்பலோ 1969இல் நிலவில் இறங்கியதிலிருந்து இரண்டாண்டுகள் அங்கு பணியாற்றினார். பிறகு அமெரிக்க ஐக்கிய சபை அவரை இலங்கைக்கு விமானப் பொறியியல் கல்லூரி தொடங்க அனுப்பியது.

இலங்கை அரசு அதை முன்னெடுக்காததால் மீண்டும் அமெரிக்காவிற்குத் திரும்பி 2000ஆம் ஆண்டில் அனைத்துப் பணிகளிலிருந்தும் ஓய்வு பெற்றார். இரண்டாண்டுகளுக்கு முன்னால் இயற்கை எய்தினார் சொக்கப்பா.

சொக்கப்பாவிடம் வாழ்க்கையில் உங்களுக்கு மிகவும் வேதனை தரும் நிகழ்வு எது எனக்கேட்டபோது, “பல ஆண்டுகளுக்குப் பின் என் சொந்த நாட்டுக்கு வந்தபோது என்னால் என் மொழியில் பேச முடியவில்லை. மனத்துக்குப் புரிவதை வார்த்தையாக வெளிப்படுத்த முடியவில்லை. என் தாய்மொழியைப் பேச முடியாததால் என் சொந்த மண்ணில் அந்நியனாக நின்றேன்” என்றார்!

**தகவல்: பாண்டியன் சுந்தரம்**



MITRA PICTURES (P) LTD.
M.S.MOORTHY
PRESENTS
விரைவில்
திரையில்
சந்திப்போம்!
AUDIO & TRAILER LAUNCH
3RD JANUARY 2026
99/66
NINETY NINE / SIXTY SIX
STORY, SCREENPLAY, DIALOGUE, LYRICS, MUSIC, DIRECTED BY
M.S.MOORTHY
D.O.P. SEVILORAJA CREATIVE DIRECTION RAVI PAARGHAVAN PRODUCTION CO-ORDINATOR MOHANA MAHENDIRAN
EDITOR DV.MEENAKSHISUNDAR ART P.JAI MURUGAN DANCE SRIDHAR, AKSHAY ANAND ACTION FIRE KARTHICK
VFX V.RAGHAVAN DI IGENE SOUND MIXING RAJESH PRODUCTION MANAGERS JAYARAJ, VENKATESH
STILLS THENI SEENU PRO BHUVAN DESIGNS BLESSON ANJALAI
நாள் : 03.01.2026 (சனிக்கிழமை) நேரம் : மாலை 5.30 மணி இடம் : வள்ளுவர் கோட்டம், நுங்கம்பாக்கம், சென்னை - 34.

POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 January 2026
MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/2025-2027
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2025-2027

# 2026

நேற்று
2025ல்...
நடந்தவை
கடந்தவைகளாக
இருக்கட்டும்!

இன்று
2026ல்
நடப்பவை
நல்லதாக
நடக்கட்டும்

நாளை
உண்மையான
உழைப்புக்கு
உறுதியான வெற்றி
கிடைக்கட்டும்!

அனைவருக்கும் இனிய
ஆங்கில புத்தாண்டு
நல்வாழ்த்துகள்!



பீப்பிள் ஸ்டார் **MAHA MOORTHY**
மித்ரா குழுமங்களின் நிறுவனர்,
ஆசிரியர் மித்ரா டைம்ஸ் மாத இதழ்

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY